திராவிடநாடு

8—4—62 | வார வெளியீடு | விலை 16 காசு

உனது பணி!

—[ப. இறைநம்பி]—

★

விளைச்சல் விளைந்தது; அறுவடை கண்டோம்;
வீணர்கள் தலைகுனிந் திட்டார்!
களைப்பை நீக்கியே களம்புகுந் திடுவோம்;
கடமையின் வெற்றிநம் கையில்!
களைகள் போக்கியே விடுதலைப் பயிரைக்
கண்ணெனக் காத்திடல் வேண்டும்
முளைக்கும் போதிலே மூண்டபல் லின்னல்
முறிந்தன தூள்தூள்! தூளே!!

ஆறெனச் சொன்னார்; மூன்றெனக்கூறி
அழிந்திடும் கழகமென் றிட்டார்!
ஆறென விடுதலை ஆர்வம் பெருகிட
அணையிடும் வழியறி யாமல்,
சேறென வடவர் மனங்கலங்கிடவே
சிறுநரி அனையார் பலரும்,
கூறிடு வோமெனக் கொடுமுறைதன்னால்
குலைத்திட வழிபார்க் கின்றார்!

பிளவிடைத் தூங்கும் தீந்தேன் எடுப்போன்
பெறுவது துன்பமென் றாலும்,
உளந்தள ராமல் முயன்றுபின் அடைந்தே
உண்கையில் மகிழ்ந்திடல் போலே,
களம்புகுந் தேனும் விடுதலை பெற்றுக்
களிப்புடன் வாழ்ந்திடல் வேண்டும்;
இளவலே! உன்றன் பெரும்பணி யெல்லாம்
இதற்கென அமைந்திடல் வேண்டும்.

விளைச்சல்

மாதவரின் மனத்தில் கடந்தகால எண்ணக் குமுழிகள் ஒன்றோடொன்று மோதிமுட்டி அவரைத் திணறடித்துக் கொண்டிருந்தன. அப்பா! எவ்வளவு காலத்திய தவம் அது? இன்றுதான் அத்தவம் முற்றுப்பெற்று முழுநிலை அடையப் போகிறது. மனத்தில் எழுந்திருந்த இத்தனைகாலக் கனவுகட்கு நிச்சயம் நல்ல முடிவு கிடைக்கப்போகிறது என்பதை முன்கூட்டியே அறிந்த எவருடைய இதயந்தான் அமைதியாக இருக்கும். துன்பம் வந்தால் மட்டும்தான் மனம் அமைதியை இழந்து தவிக்கும், வேதனை அடையும் என்பது உண்டா? இன்பம் வந்தாலும் அப்படித்தான் மனத்தின் அமைதி கெடுகிறது. இன்ப உணர்வுகளும் ஒருவகையான வேதனை தானே? இதமான வேதனை. மிதமான வெப்பத்தில் வாழுபவனுக்கு எப்படி அதிக வெப்பமும் அதிகக் குளிரும் ஒத்துவராதோ, அதைப்போலத்தான் மனத்திற்கும் இன்பமானாலும்; துன்பமானாலும் சற்று அதிகப்பட்டுவிட்டால் அதனைப் பாதித்தே தீருகிறது.

மாதவர், கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை என்பார்களே, அதை அனுபவத்தில் அறிந்தார். உடல் அமைதி கொண்டிருந்தாலும், மனம் எங்கோ பறந்துசென்று கொண்டிருந்தது. அதில்தான் எத்தனை இன்பம்—எத்தனை இதம்?

இன்று அவர் மகன் அவர் எண்ணியபடியே காவலர்களின் உயர்தர அதிகாரி ஆகிவிட்டான். 'இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ்'

இன்றுதான் முதன் முதலாக உத்யோகப் பொறுப்பை ஏற்கச்சென்றிருக்கிறான். அவன் திரும்ப வரும்பொழுது தன்னுடைய மேல் தர அதிகாரியோடு வரப்போவதாகக் காவல் ஊழியன் ஒருவனை அனுப்பி, அதற்கான ஏற்பாடுகள் செய்யும்படியும் சொல்லி அனுப்பி இருக்கிறான். முன்பெல்லாம் இப்படி அதிகாரிகள் தம்கீழ் உள்ளவர்களை வேலை வாங்குவது என்பது மாதவருக்குக் கட்டோடு பிடிக்காது. 'ஊழியர்கள் எல்லாம் அரசாங்கத்தின் ஏவலாளர்களே தவிர, தனிப்பட்ட அதிகாரிகளுக்கல்ல, ஊழியர்களுக்கான ஊதியம் அரசாங்கத்தின் பொருளிலிருந்து வருகிறதே தவிர, அதிகாரிகளின் பாக்கெட்டில் இருந்தல்ல' என்று கேட்டுவிடவேண்டும் என்றுகூடப் பலதடவைகள் அவர் மனம் துடித்ததுண்டு; அதற்குத் தகநா அசைந்ததுண்டு. ஆனால், தனக்காக இல்லாவிட்டாலும், தன்

கரந்தை—கணேசன்

மகனுக்காக, அவன் வாழ்வுக்காக, அவன் எதிர்கால ஒளிக்காக, அவனை அடித்தளமாக வைத்துத், தான் கட்டிக்கொண்டிருக்கும் கற்பனைக் கோட்டைக்காக அவர் அக்கேள்விகளை மன ஏட்டிலே எழுதியதோடு அழித்துப் போட்டார்.

இன்று.........தன் மகனின் கீழ் வேலை செய்யும் ஊழியன் வந்தபொழுது, அவருக்கு, முன் தன்மனத்தில் எழுந்து எழுந்து அவிந்துபோயிருந்த ஆவேசம் எங்கோ போய்விட்டது அடியோடு. மருந்துக்குக்கூடக் காணமுடியவில்லை. மாறாக அவர் மனம் 'தன் மகன் மணிக்கு ஊழியக்காரன் இவன்' என்ற எண்ணத்தைத் தோற்றி மகிழ்ந்துகொண்டிருந்தது.

இப்பொழுது யாராவது அவரிடம் சென்று 'அன்று அப்படியெல்லாம் எண்ணிய நீர், இன்று மட்டும்' என்றால்.........என்ன சொல்லுவாரோ தெரியவில்லை. ஆனால், அவர் மனமே அதே கேள்வியைக் கேட்டபொழுது அவர் திக்குமுக்காடிப் போனார். 'உம்......அது ஒருகாலம்......இது ஒருகாலம்.' அவர் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டார்.

'பிறர் தன் தவறுகளைக் கண்டுவிடும்பொழுது அதிலிருந்து தப்புவதற்கு ஏதாவது ஒரு சாக்குச் சொல்வது என்பது வழக்கமான செயல்தானே' என்றது மனம். சே......மனம் என்ன இப்படி இடக்குச் செய்கிறது? அவர் வாய் முணுமுணுத்தது.

மனம் என்பது கடிவாளம் இல்லாத குதிரை என்ற வாசகம் அவருக்கு உதித்தது. அதை அடக்கியவர்கள்தானே முற்றத்துறந்த யோகிகள், அதன் போக்கிலே செல்பவர்கள்......?

"நான் என்ன அதன் போக்கிலேயா செல்கிறேன். செல்லமாட்டேன். செல்லவிடமாட்டேன்" அவர் தன் மனக்குதிரையை அடக்கினார். மனத்தை வேறுபுறம் திருப்பினார்.

உடனே அவருக்கு மென்மையான குறுநகை எழுந்து உதிர்ந்தது. இப்படித்தான், தன்னுடைய இன்றைய மனத்தைப்போலத்தான் சிறு குழந்தையாக, துள்ளித் திரியும் பருவம் நிறைந்த பள்ளிப்பாலகனாக மணிஇருந்தபொழுதுஅடிக்கடி ஏதாவது அடம்பிடிப்பான். ஒருநாள் மாதவரைப்பார்த்து,நிலவைக்காட்டி அது என்ன அப்பா? என்றான். அவர் அவன் அறிவுக்கு ஏற்பப் பதில்

(4-ம் பக்கம் பார்க்க)

அல்ஜீரிய விடுதலை

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (8—4—62 தனிப்பிரதி 16 காசு [இதழ்

சுதந்திரப் போர் இன்னும் சிலகாலம் தொடர்ந்து நடந்தால் சகாரா பாலைவனமே இரத்தவெள்ளமாகி விடுமோ என்று உலகின் ஆங்காங்கே உள்ள விடுதலை விரும்பிகள் கவலை தெரிவிக்கும் வகையில் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வந்த அல்ஜீரிய உரிமைப் போர், தற்போது சிலபல வகைகளில் நல்ல முடிவினை நெருங்கியிருக்கிறது. ஏகாதிபத்திய முறைமைக்கே 'பெயர்' பெற்ற பிரிட்டன் போன்ற நாடுகளெல்லாம் மாறிவரும் விடுதலை உணர்வுகளை மதிக்கும் வகையில் ஆப்பிரிக்காவின் பல்வேறு நாடுகளுக்கும் உரிமை வழங்கிக்கொண்டுவரும் நேரத்தில், அல்ஜீரியாவின் அடிப்படை உரிமைகளையே மறுத்ததோடு, அந்நாட்டுக் குடிமக்களின் பல இலட்சக்கணக்கான உயிர்களையும் பறித்த பிரான்சு இப்போதுதான் காலத்தின் கேள்விக்குப் பதில் சொல்லித் தீரவேண்டிய கட்டத்தை அடைந்துள்ளது.

ஐரோப்பாவின் ஒரு பகுதியிலிருந்து கொண்டு ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியிலுள்ள அல்ஜீரியாவை இரும்புத்திரை ஆட்சி நடத்தி வந்த பிரான்சு, அண்மையில் அந்நாட்டிற்குப் படிப்படியான உரிமையைக் குறிப்பிட்ட காலத்துக்குள் வழங்கிவிடுவதாகச் சம்மதித்துள்ளது. அந்த நிலைக்கு பிரான்சு தானாக வந்துவிடவில்லை; வரவழைக்கப்பட்டது. எந்த டிகாலே வந்தால், தங்கள் எண்ணம் வெற்றியடையும் என்று பலதரப்புக் கருத்துக்களைக்கொண்ட பிரான்சின் மக்கள் தங்களுக்குள்ளாக எண்ணிக்கொண்டிருந்தார்களோ, அதே டிகாலே பிரான்சு தேசத்து ஏகாதிபத்திய உணர்ச்சி படைத்த சில பிரிவினரைப் பார்த்து "அமைதியாய் இருங்கள், அல்ஜீரிய சுதந்திரம் ஒரு இயற்கையின்பாற்பட்ட அவசியம்; காலத்தைக் கடத்தலாமே ஒழிய, கொடுத்தே தீரவேண்டிய ஒரு உண்மை'' என்று சொல்லிவிட்டார்.

மனித உரிமைகள் போற்றப்படும் தற்காலத்திலும், விடுதலை உணர்ச்சிகள், உரிமை வேட்கைகள் பாராட்டப்படும் சமயத்திலும் அல்ஜீரியா தனது சுதந்திரத்துக்காகக் கொடுத்த விலை மிக அதிகம். ஏறக்குறைய வீட்டுக்கு ஒருவருக்கு மேலாக ஒவ்வொரு குடும்பமும் தம் நாட்டு விடுதலைக்காக ஒரு உயிரைப் பலிகொடுத்திருக்கிறது. இது அல்ஜீரியாவின் மொத்த மக்கட் தொகையில் கணிசமான பகுதி; அல்ஜீரிய மக்களின் கணக்குப்படி பத்து இலட்சம் பேர்! நிகழ்ந்து வரும் அரசியல் சூழ்நிலைகளில் ஆண்டுகள் நிமிடங்களாகக் கருதப்படும் இற்றை நாளில், அல்ஜிரியர்கள் தங்கள் சுதந்திரத்திற்காக வெறிபிடித்த பிரான்சிடம் ஏழாண்டுகள் எல்லாவிதமான போர் முறைகளையும் கையாளவேண்டி இருந்தது.

அரசியல் அடிப்படையில் பிரான்சுடன் பல உடன்படிக்கைகளின் மூலம் கட்டித் தழுவும் அமெரிக்காவாக இருந்தாலும் சரி, அதன் எதிரி நாடான இரஷ்யாவாக இருந்தாலும் சரி, அல்ஜீரியாவின் விடுதலைப் போரைப் பற்றி எந்தவித வெறுப்பும் இதுவரையில் நேர்முகமாகக் காட்டியது கிடையாது; எனவேதான் சுதந்திர உடன்படிக்கைகள் உருவானதும் ஒவ்வொரு நாடும் போட்டி போட்டுக்கொண்டு அல்ஜீரியாவுக்குத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றன. இது, விடுதலைத் தாகத்தையும், அது முடிவில் பெறும் பரிசையும் எந்த ஒரு ஆற்றலும் வெறுக்கவோ தடுத்து நிறுத்தவோ முடியாது என்பதைத்தான் காட்டுகிறது.

செயற்கை முறையாலும் அதைவிடச் சந்தர்ப்ப வசத்தாலும் இந்தியா என்ற தளையில் கட்டுண்டு கிடக்கும் நாமும் அல்ஜீரியாவை அனுதாபத்துடன் கவனித்து வந்தோம். அல்ஜீரியாவுக்கும் பிரான்சுக்கும் அரசியல் பண்டிதர்கள் எந்தெந்தக் கருத்தைக்கொள்கிறார்களோ, அதே கருத்துக்கள் ஏக இந்தியா, என்ற போலித் தத்துவத்துக்கும் சரித்திர பூர்வமான உண்மையான திராவிடத்துக்கும் பொருந்தும். நமது விளக்கங்களை இன்னும் சரிவரப் புரிந்துகொள்ள மறுக்கும் நமது எதிர்ப்பாளர்களுக்கு நாம் மிகச்சுலபமான வகையில் ஒரு எடுத்துக்காட்டுக் கூறவேண்டுமானால், பிரான்சையும் அது இதுகாறும் அடிமைப்படுத்தியிருந்த அல்ஜீரியாவையும்தான் உதாரணம் காட்ட முடியும்.

இன்று அல்ஜீரியா உலக கவனத்தைக் கவர்ந்த அளவு திராவிடத்தின் விடுதலை வேட்கையும் தற்போது இந்தியத் துணைக்கண்டத்து அளவில் தெரிந்திருப்பது போல் சர்வதேச அளவில் தெரியத்தான் போகிறது.

எந்த வகையிலும் சளைக்காத சில அரசியல் வித்தகர்கள் இங்கும் உள்ளனர். அல்ஜீரியர்கள் எப்படிப் பிரான்சையும் எதிர்த்துக்கொண்டு வேறு இடர் கொடுக்கும் அமைப்புகளுக்கும் பதில் சொல்லிக் கொண்டுவர நேர்ந்ததோ, அதேபோல் நாமும் இந்திய ஏகாதிபத்தியம் போலி என்பதை விளக்கிக்கொண்டு, நமது வரலாற்றையே நம்பமறுக்கும் "நம்மவர்"களையும் புரியவைத்துக்கொண்டு சென்றாகவேண்டியிருக்கிறது.

அல்ஜீரிய விடுதலைபோன்ற முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் நமக்கு மேலும்மேலும் புதியதொரு நம்பிக்கையையும் தியாக உணர்வையும் இடைவிடாத முயற்சியையும் கொடுக்கிறது. அதேபோது விடுதலை என்பது ஒரு சாதாரண பிரச்சனையோ, அரசியல் சிக்கலோ அல்ல; ஒரு சரித்திர நிகழ்ச்சி, வரலாற்று உண்மை என்பதைத்தான் அழுத்தந்திருத்தமாகத் தெளிவு படுத்துகிறது.

எனவே நமது பணியும் "திராவிட விடுதலை" என்பது ஒரு இயற்கையின்பாற்பட்ட அவசியம், இன்றில்லாவிட்டாலும், என்றாவது ஒருநாள் நடந்து தீரவேண்டிய நிகழ்ச்சி; சரித்திர சம்பவம் என்ற உண்மைகளை நமது எதிரிகளுக்குத் தெளிவுபடுத்தும் முறையில் அல்ஜீரியா விடுதலைப் பாதையில செல்லும் இந்நாளில் மேன்மேலும் தொடருவோம்.

விடுதலை என்பது ஒரு சரித்திர உண்மை என்பதை மறுப்பவருக்கு, ஏதோ ஒருசில கற்பனைகளைச் சந்தர்ப்ப வசத்தால் கருத்தில் கொண்டு நமது சாத்தியக்கூற்றைச் சந்தேகத்தோடு வினவுவோருக்கு அல்ஜீரிய விடுதலை வீரர்களது புகழ்மிக்க மணிவாசகம் ஒன்றைப் பார்வையில் வைப்போம்.

"அல்ஜீரிய விடுதலைஅடைந்தாகவேண்டிய ஒன்று; நமது தலைமுறையில் இல்லையென்றால், அடுத்த தலைமுறையினராவது பெறும் சூழ்நிலையைக் கொடுப்போம். பின்வரும் சந்ததியார் சுதந்திர பூமியில் வாழ்வதற்காக நம் சந்ததியினர் செத்துமடிவோம்!"

இந்த விடுதலைப் பரணியின் பொருள் பொதிந்த வாசகங்களை நாமும் மீண்டும் மீண்டும் கருத்தில் கொண்டு மாற்றாருக்கும் பார்வையில் வைப்போமாக.

2-ம் பக்கத் தொடர்ச்சி

சொல்லவேண்டும் என்ற நிலையில் 'அது பந்தப்பா' என்றார். அவ்வளவுதான் 'அந்தப் பந்தைப் பிடித்துத் தாப்பா! நான் அதைவைத்து விளையாடவேண்டும்' என்று அடம்பிடிக்க ஆரம்பித்தான், அடத்தை மாற்ற எத்தனையெத்தனைஉபாயங்களையோ செய்து பார்த்தார். முடிந்தால் தானே! சிறு குழந்தைகளின் பிடிவாதமும், பெண்களின் பிடிவாதமும் எந்த மருந்தாலும் தீர்வதில்லை. அவனை ஏமாற்றித் தீர வேண்டிவந்தது. என்ன சொல்லி ஏமாற்றினார் என்று இன்று அவருக்கு நினைவில்லை. ஏமாற்றினார். இன்று தன் மனத்தையும் அப்படித்தான்......சாட்டைகொண்டுதன்னை யாரோ அடிப்பதுபோன்று பட்டது. 'சே! மனம் என்ன இப்படி முற்றும் எதிரியாகிவிட்டது. பகையாகிவிட்ட மனத்தை எப்படி அடக்குவது? அதிலும் இந்த நல்ல நேரத்திலா இப்படிப் புரட்சிசெய்யவேண்டும்! முதலிரவுக்குச் செல்லப் போகும் ஒரு இளைஞன் முன்பு, ஒரு மூளிவந்து நின்று மூக்கைப்பிடிக்கப் பேசிக்கொண்டிருந்தால்,..?'

'கிடக்கிறது மேலே ஆகவேண்டியதைப் பார்ப்போம்.'

'பொன்னு எல்லாம் ஆயிற்று?' கூச்சலிட்டு மனத்தின் கேள்விக் குறியை நீக்கப் பார்த்தார்.

'முடிந்ததுங்க......பார்டிக்கு எல்லாம் சொல்லியாயிற்று. வேறு ஏதாவது இருந்தால் நீங்கள்தான்சொல்ல வேண்டும்.'

என்ன இன்பம்; இத்தகு இன்பத்திற்காகத் தன் முன்னே நிற்கும் அதே ஊழியனாக ஆவதற்கு எத்தனை யாண்டுகள் பணியாற்றியிருக்கிறார்! முப்பது ஆண்டுகள்.........முப்பது ஆண்டுகளின் துன்பம்......... ....கசப்பையே உண்டுவந்தவனுக்கு நாவில் ஒருதுளி தேன்பட்டாலே போதும், அவன் நாவே இனித்து விடுவதுபோல இவர் மனமும் மகிழ்ச்சியால் இனித்தது.

'பட்டதெல்லாம் போதும் படமுடியாதினித்துயரமல்ல' 'பட்டதெல்லாம் போதும்இனிச்சுகம்காண்பேனே' அடிகளாரின் பாட்டைத் திருத்திப் பாடவேண்டும்போலிருந்தது மாதவருக்கு. தன் மகன் உயர்ந்து ஒரு உயர்தர அதிகாரியாக வரவேண்டும் என்பதற்காக, இதேபோல் எத்தனை அதிகாரிகட்கு, அதிகாரிகளின்வீட்டில்கூட....இருந்தால்என்ன? அதன் பலன்தானே! இன்று என் மகன் அதே அதிகாரிகளின் நிலையில்! இல்லாவிட்டால் ஒரு ஏழை போலீஸ்காரனின் மகன். அதேபோன்ற போலீஸ்காரர்களுக்கெல்லாம் இன்ஸ்பெக்டராக வர முடியுமா?

இப்பொழுது மாதவருக்கு எண்ணங்கள் இனித்தன. கசப்பான பாகற்காயானாலும் அதன் நலனை அறிந்தவனுக்குச் சுவைத்துச் சுவைத்து அதுவும் இனிப்பாவதைப் போல இனிப் பழைய நினைவுகள் தொடர்வதிலே தடையில்லை. அழகும், மணமும் நிறைந்த மலர்ச் சோலையைச் சுற்றிவரும் வண்ணத்திப் பூச்சியைப்போல அவர் பழைய நினைவுகள் என்னும் சோலையிலே சுற்றிவரத் தொடங்கினார்.

*

அப்பொழுதுதான் மாதவரின் மனைவி கர்ப்பமுற்றிருந்தாள். அதை அறிந்தவுடனேயே மாதவருக்கு

(15-ம் பக்கம் பார்க்க)

வாழ்ந்த குடி

—[கனகு]—

5. அறிவிலா வாணிகம்

வாசு வெளியில் வந்து நின்றான். 'தந்தையை எதிர்த்து நான் தவறாக ஏதேனும் பேசிவிட்டேனோ?' என்று அவன் தன்னைத் தானே பல முறை கேட்டுக்கொண்டான். அவன் தனக்குள் கேட்டுக்கொண்ட அந்தக் கேள்வி தவிப்பாகி, குழப்பமாகி, மயக்கமாகி அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. அந்தக் குழப்ப நிலையோடு அவன் அங்கே நின்று கொண்டிருந்தபொழுது, அவன் எதிரில் ஊர்தியொன்று வந்து நின்றது. அந்த ஊர்தியிலிருந்து கார்த்தி யிறங்கினான். கார்த்தியைப் பார்த்ததும் வாசு ஒருபுறம் திகைப்படைந்தான்; பிறிதொருபுறம் வியப்பெய்தினான். அந்த ஊர்தி யாருடையது என்று அவனுக்குத் தெரியாதா என்ன? தெரியும். அது அங்கு ஏன் வந்தது என்று அவன் அறியானா என்ன? அறிவான்; எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிவான். ஆனால்,

கார்த்தி அங்கு வந்திருந்த முன்னிலை அவன் அறிந்ததில்லையே! அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லையே! 'நீயேவந்திருக்கின்றாயே! திடீர் செய்தி வேறு ஏதாவது உண்டா?' என்று கேட்க நினைத்தான் வாசு. வார்த்தைகள் உடனே வெளிப்படவில்லை. அவன் நிலையைப் புரிந்துகொண்டவன்போல் கார்த்தி பேசினான்:

"நீ வருவாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் வீட்டில் ஏதாவது.. ......நடந்து, அது......நீ வருவதை எங்கே தடைசெய்து விடுகிறதோ... ...என்று பலர் ஐயம் தெரிவித்தார்கள். வீட்டில் எது நடந்திருந்தாலும் உன்னைக் கையோடு அழைத்து வருவதை என் பொறுப்பு ஆக்கினார்கள்."

கார்த்தியின் வார்த்தை ஒவ்வொன்றும் வாசுவிற்கு மேலும் வியப்பை மூட்டிக்கொண்டு வந்தது. 'அட! சற்றுமுன்தானே அவர்களின் சதியும், பித்தலாட்டமும் கலந்த திட்டத்தை நானே செவியுற முடிந்தது. இந்தச் செய்தி என்னை முந்திக்கொண்டு, — இந்த நய வஞ்சகத்துக்கு ஒரு கருவியாகப் பயன்படப் போகும்—என் தந்தையை முந்திக்கொண்டு என் நண்பர்களுக்கு எப்படிஎட்டியது? நான் சார்ந்துள்ள இயக்கத் தோழர்களுக்கு எப்படி எட்டியது? என்னே என் தோழர்களின் தீவிர இயக்கத் தொண்டு! என்னே அவர்களின் சுறுசுறுப்பு! என்னே அவர்களின் மதி நுட்பம்!' என்று அவன் தனக்குத்தானே மனத்துள் சொல்லிக்கொண்டான் — எதிரில் நிற்கும் நண்பனிடம் பேச்சுக் கொடுக்க வேண்டுவதை மறந்து. கார்த்தியோ வாசுவின் முக மாற்றங்களை உற்று நோக்கியவண்ணம் அதிலிருந்து எதையும் உய்த்துணர்ந்துகொள்ள முடியாத வண்ணம் தவிப்பவனானான். இப்படிச் சற்று நேரம் கழிந்த பின் வாசுவே பேசினான் — 'சரி போகலாமா?' என்று. இருவரும் ஊர்தியில் ஏறிக் கொண்டனர்.

இயக்கத் தோழர்கள் எல்லாம் கூடியிருந்த இடத்தை நோக்கி வாசு நடந்தபோது, அங்கே அவர்கள் ஒவ்வொருவரும் அவனைப் பார்த்த பார்வை; அதில் தோய்ந்திருந்த பொருள் என்னவென்றே வாசுவால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்தத் தோழர்களில் ஒருவர் பரபரப்போடு வாசுவை அணுகினார். "வாசு, உனக்குச் செய்தி தெரியுமா? உன்னைச் கடத்திக்கொண்டு போவதற்கு மாற்றார்கள் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கே அந்தச் சூழ்ச்சி பலித்துவிட்டதோ, பலித்துவிடப் போகிறதோ என்று ஐயத்தோடு, அச்சத்தோடுதான் இவ்வளவுநேரம் நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம். நல்லவேளை அவர்களின்சூழ்ச்சி உருப்பெறுமுன் நீ இங்கு வந்துவிட்டாய்!"

"என்னையா! கடத்திக்கொண்டு போவதா? — அதனால் அவர்கள் அடையும் பயன்தான் என்ன?"

"என்ன இப்படிக் கேட்கிறாய்! அவர்களின் பித்தலாட்டங்களை நீ அறியாயா என்ன? அவர்களின் சூழ்ச்சியை, அவர்கள் எப்படிப்பட்ட வஞ்சகர்கள் என்பதை நீ அறியாயா என்ன?

"உன்னைக் கடத்திக்கொண்டு போய் வைத்துக்கொண்டு, நம் இயக்கத்திலிருந்து நீ விலகவேண்டும்; விலகல் கடிதம் தரவேண்டும் என்று வற்புறுத்துவார்கள்; அச்சுறுத்துவார்கள்; தேவைப்பட்டால் சித்திரவதைகூடச் செய்வார்கள், அவற்றையெல்லாம் நீ பொறுத்துக் கொள்ளமுடியாமல், அவர்களுக்கு நீ அஞ்சிவிட்டால், அவர்கள் வார்த்தைக்கு நீ இணங்கிவிட்டால், பிறகு கேட்கவேண்டுமா? நீதான் இந்த வட்டாரத்தின் பிரதிநிதி. ஆணவ ஆட்சியின் பேராளன்! அவர்கள் புரியும் அநியாய அட்டூழியங்களுக்கெல்லாம், ஊரையடித்து உலையிற் போடுகின்ற செய்கைகளுக்கெல்லாம் பொறுப்பாளன்.

"என்ன நண்பா, என்னைப்பற்றி இப்படித் தவறாகக், குறைவாக மதிப்பிட்டிருக்கிறாய்?"

"நான் அப்படி மதிப்பிடவில்லை வாசு. அவர்கள் திட்டம் அப்படி. நீ சில நாட்கள் பாதுகாப்போடு இருக்கவேண்டும். ஏனென்றால், கூலி பெற்றுக்கொண்டு கலகம் விளைப்பதையே தங்கள் அரும்பணியாக எண்ணிக்கொண்டு, அவ்வழி இயங்குகின்ற ஒரு கூட்டமே—சிறு கும்பல்தான்—அவர்களுக்குத் துணை நின்று தொழும்பு புரிந்துகொண்டு வருகின்றது."

"நண்பா, ஒன்று சொல்கிறேன். அதைஎப்போதும்நினைவில்வைத்துக் கொள். காலித்தனத்தைக் கண்டு நாம் அஞ்சி அஞ்சி அடங்கிப் போய்க்கொண்டிருக்கும் வரை, அந்தக் காலித்தனம் நம்மை மிஞ்சி மிஞ்சி அச்சுறுத்திக்கொண்டுதானிருக்கும். அதை எதிர்க்கும் துணிவு எப்போது நம்மிடையே கிளர்ந்தெழுகிறதோ, அப்போதுதான் அது அடங்கி ஒடுங்கும். அப்படி நான் சொல்லும்போது, நாமும் காலித்தனத்தில் ஈடுபட வேண்டுமென்றோ, வன்முறை ஒன்றே இறுதியானது என்று எண்ணவேண்டுமென்றோ சொல்வதாகப் பொருள் கொண்டுவிடக் கூடாது. அமைதியான முறையில் அஞ்சாமையோடு அந்தக் காலித்தனத்திற்கு எதிர் நிற்கவேண்டும் நாம். எப்படிப்பட்ட துன்பங் தொல்லைகளுக்கும்; இழப்புக்களுக்கும் நம்மை நாம் சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்போதுதான் அந்தக் காலித்தனம் அடங்கும். ஏனென்றால் வன்முறையோ அடக்குமுறையோ–அவற்றின் வழி வந்த காலித்தனத்தோடுகூட ஒவ்வொன்றும் தன்னிடத்தே உடனிகழ்ச்சியாகக் கொண்டிருக்கும் வெய்ய தன்மை இருக்கின்றதே, அது தணியவேண்டுமானால், பிறருடைய துன்பங்களையும்,தொல்லைகளையும் பார்த்தேதான் ஆகவேண்டும் என்றொரு நியதி இயற்கையாகவே அமைந்துள்ளதுபோலும்! பிறருடைய இழப்பைக் கண்டுதான் அந்த வெம்மை தணியவேண்டும்போலும்! காலித்தனத்திற்கு வேண்டுமானால் எடுத்த எடுப்பில்ஆற்றல் கூடியிருக்கலாம். ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து அந்த ஆற்றல் வெற்று ஆற்றல். இயந்திர ஆற்றல். மனவலி அதனிடம் சற்றும் இராது. எதனிடம் மனவலி இல்லையோ, அது மனச்சான்றுக்கும் புறம்பானது என்றும் ஆகிவிடுகிறது. மனச்சான்று எப்போதுமே தன்னுடைய வலியைக் காட்டிக்கொண்டிருப்பது இல்லைத்தான். ஆனால், சரியான சந்தர்ப்பத்தில் அது தன் ஆற்றலை உணர்ந்துகொண்டு செயல்பட்டே தீரும்."

"நீ சொல்வது சரிதான். ஆனால் மனம் என்ற ஒன்று இருந்தால்தான் அங்கே மனச்சான்றும் இருக்கமுடியும். நம்மை முரட்டுத்தனமாக எதிர்ப்பவரிடம், எப்படியாவது நாம் தோல்வியடைவதைக்காணவேண்டுமென்று எண்ணுகின்றவர்களிடம் மனம் என்பதே இல்லையே! எப்படி மனச்சான்றை அங்கே நாம் எதிர்பார்க்கமுடியும்? ஆகவே முதற்கண் அறிவறிந்தோர் எல்லாம் மனம் என்பதை உடையோராகவும், அது கூறுகின்ற சான்றின் வழி நிற்போராகவும், அந்த நிலையிலிருந்து இழியாத திண்மையும், வன்மையும் உடையோராகவும் நிலைபெறுதற்கான செயற்பாட்டில் நாம ஈடுபடவேண்டும். அப்போதுதான் அச்சத்தாலும், ஆபாசத்தாலும் அலைக்கழிக்கப்பட முடியாத உள்ளங்களையுடைய மக்களை எங்கணும் காணமுடியும். அப்படிப்பட்ட மக்களிருக்கும் இடந்தான் மக்களாட்சி நில்வுமிடம். ஆகவே மக்களாட்சி நிலவவும், குல்வதும், மனச்சான்று மிக மிகத் தேவை. மனச்சான்று வேண்டுமென்றால், அங்கே நல்ல உள்ளம் பெற்றோர் பெருகி நிற்பது அதனினும் கூடுதலான தேவை. அதாவது,

"மக்களின் முன்னோடிகள் என்று சொல்லிக்கொள்வோர் அனைவரும் இதயமுள்ளோராகவும்இருக்கவேண்டும். இதயமிருந்தால்தான் அங்கே நல்லதையும், அல்லதையும் பகுத்துப் பார்க்கமுடியும். பகுத்துப் பார்த்தால் நல்லிதயத்தில் நல்லதுதான் தங்கவேண்டுமென்ற நியதியை அந்த நல்லிதயத்தின் சொந்தக்காரரால் மீறவே முடியாது.

"அவ்வாறில்லாமல் ஒரு பாங்கினர் மனச்சான்றை — நல்லிதயத்தை — மிகமிகப் பெற்றோராகவும், மற்றொரு பாங்கினர் மனச்சான்றே இல்லாதவராகவும் உலவி வருவரேயானால், அங்கே மக்களாட்சி எவ்வாறு செழிப்படையும்? அச்சத்தாலும், ஆபாசத்தாலும் அலைக்கழிக்கப்படாத மக்களை அங்கே எவ்வாறு காணமுடியும்?"

உரையாடலின் இடையிற்புகுந்து கார்த்தி இவ்வாறெல்லாம் கூறினான்.

"இந்த நிலையை எப்படித்தான் மாற்றுவது,அல்லது சமாளிப்பது?"

"மாற்றுவதற்கான ஒரே ஒரு வழி முன்னே சொன்னதுதான்;–மக்களையெல்லாம்அறிவறிந்த மக்களாக்கிக் காண்பதுதான். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளில் மெய்ப்பொருளினைக் காண்பதற்குரிய அறிவினைப் பெற்ற மக்கள் மிகுதியாகுமாறு செய்வதுதான். யார் எதைச்சொன்னாலும், அதனைச் சிந்தித்துத் சீர்தூக்கிப்பார்க்கும் மக்கள் தொகை மிகுதியாகவும், நல்லதோ, கெட்டதோ மற்றவர்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொண்டு செம்மறியாட்டைப்போல் பின்தொடரும் பாமரரின் தொகை குறைவாகவும் இருக்குமேயானால், கட்டாயம் அந்தப் பாமரரும் நல்லோரின் வழிதான் செல்வார்கள். ஏனென்றால், அறிவறியா மக்கள் பெரும்பான்மையைப் பார்த்துப் பின் செல்வதுதான் எங்குமுள்ள வழக்கம். ஏறுக்கு மாறாகச் செயல்புரியும் துணிச்சல் பெறுகின்ற சிலர்கூட அறிவறிந்தவர்கள்தான். மக்களை அச்சுறுத்தி, ஆபாசத்துக்குள்ளாக்கி தம்வழி திருப்புகின்றசூழ்ச்சிகள் பலவும் புரிகின்றவர்கள் சிலர் கூடக் கற்றறிந்தவர்கள்தாம். ஆனால், ஒருபுறம் அவர்களின் இயல்பான தொகை குறைவாகவேதான் இருக்கும். பிறிதொருபுறம் அவர்கள் எத்துணைதான் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருந்தாலும், முன்னரே சொன்னதுபோல் மனவலி என்பது அவர்களிடம் நலிந்தேதான் காணப்படும். ஆகவே,

"எது மிகுதியாகத் தேவையோ அது மிகுதியாகுமாறு நாம் தீவிரப் பணியில் ஈடுபடவேண்டும். அதன் மூலம் எதிர்பார்க்கும் நன்மையெல்லாம் வளரவும், மலரவும் காணவேண்டும். மாண்பு வெற்றிவாகை சூடுதற்கு வழிகோல வேண்டும். நாகரிகம் சிறப்பிடம் பெறுவதைச் செயலாக்கவேண்டும். அந்த நல்ல நிலைமைகள், "எல்லாம் உருவாவதற்கு நாம் களபலிகள் பலகொடுத்துத்தான் தீரவேண்டும். நாம் கண்ணுக்குக் கண்ணாக உயிரினும் அருமையாக எண்ணுகின்றவர்களின் தோல்வியை அல்லது தோல்விகளைக் கண்டுதான் தீர வேண்டும். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நேரும்போது மிகமிக விழிப்போடு நாம் செயலாற்றவேண்டும். உள்ள உறுதியை இழந்துவிடக் கூடாது. வலிமையைப் போக்கிவிடக்கூடாது. தளர்ந்துவிடக் கூடாது. கொள்கை என்பது–அது உண்மைக்கும், உயர்வுக்குமாகவே கடைபிடிக்கப்படுவது என்றால், அதனை எந்த ஆற்றலாலும் அழித்தொழிக்க முடியாது. அதனைப் பின்பற்றுவோர், அதனைச் செயலாக்க முனைவோர் வேண்டுமானால், பல தோல்விகளுக்கு உள்ளாகலாம். அந்தத் தோல்விகள் எதையும்

பொருட்படுத்தாது தழைத்துக் கொண்டுபோகும் நல்மரங்கள் குறைக்கப்படுவதுபோன்ற தோல்விகள்தாம். குறைக்கக் குறைக்கத் திரும்பத் திரும்ப நன்மரங்கள் குளிர் நிழலைத் தருவதுபோல், நல்லவர்கள், நல்ல கொள்கையைப் பிடிப்பாகக் கொண்டவர்கள், தோல்வி அடைய அடையப் பின்னும் பின்னும் பெருமிதம்கொள்ளும் அளவில் வளர்ந்து கொண்டுதான் வருகிறார்கள்; வளர்ந்துகொண்டே வருவார்கள்'' என்று கூறிப் பின்னும் பேசமுனைந்தான் கார்த்தி.

"சரி, இப்போதைக்கு நாம் உடனடியாகச் செய்யவேண்டுவது என்ன? அதைப் பார்ப்போம் முதலில்'' என்று வாசு அவனை இடைமறித்தான். எல்லாரும் அவர்வரிடத்திற் போய் அமர்ந்தார்கள்.

அந்த மன்றத்து நடவடிக்கைகள் முறைப்படி தொடங்கின.

"அந்நிய ஆட்சியை இந்த நாட்டிலிருந்து வெளியேற்ற, நாம் உரிமை வாழ்வுபெற இந்தப்பகுதியில் நாம் திரட்டியுள்ள வலு நமக்குத் தெரியும். நமக்கு நாமே அறிந்துகொண்டால் போதுமா? நாடறியச் செய்யவேண்டும் நம் வலிமையை. அதற்குச் சரியான சந்தர்ப்பத்தை வருகின்ற தேர்தல் நமக்களிக்கின்றது. அந்தத் தேர்தலில் நாம் போட்டியிட்டு அந்நிய ஆதிக்கத்தின் காவலர்களுக்கு எதிரானவர்கள் நாம் என்று காட்டிக்கொள்வதோடு வெற்றியினையும் ஈட்டிக் கொள்ளவேண்டும்! அதற்கு நம்மிலே ஒருவரை—தகுதியான ஆளை நிறுத்தவேண்டும். இங்கு கூடியிருப்போரில் அந்த அந்நிய ஆட்சியை எதிர்த்து நிற்கும் தகுதி வாய்ந்தவர்களில் தோழர் வாசு ஒருவர். எனவே, வாசுவே இந்தத் தொகுதியில் போட்டியிடுமாறு இந்த மன்றம் பணிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.'' என்று அந்த மன்றத்து நிர்வாகிகளில் ஒருவர் முன்மொழிந்து பேசினார். மற்றொருவர் அதனை வழிமொழிந்தார். மற்றவர்கள் எல்லாரும் அதனை ஒருமனமாக ஒப்பினர்.

வாசு அதைக் கேட்டபோது திகைப்பூண்டை மிதித்தவன்போல இருந்தான். தன் தந்தை மூலமாகக் காங்கிரசார் போட்ட திட்டத்திற்கு முற்றும் மாறாக நடந்தேறியுள்ள அந்த முடிவை அவனால் நம்பக்கூட எளிதில் முடியவில்லை.

இந்தச் செய்தி முருகேசனாருக்கு எட்டாமற்போகுமா? அவர் ஏமாற்றத்தால் துடிதுடித்தார். யார்யார் மீதெல்லாமோ அவருடைய கோபம் சென்றது. அன்று வாசு அவரோடு வாதித்துவிட்டு வெளியே வந்த போது — உடனே ஊர்தியொன்று வெளியில் வந்து நின்றதை அவர் கவனிக்காதவர்போல் கவனிக்கத்தான் செய்தார். அந்த ஊர்தியில் கார்த்திகேயன் இருந்தது பெரும் திகைப்பைத் தந்தாலும், அவன்மீது அவரால் அதிகப்படியான ஐயப்பாடு கொள்ள முடியவில்லை. ஆனால், பின்னர் கேள்வியுற்ற செய்தி, அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஏமாற்றம், அதன் விளைவாகப் பெருகிப்போன சினம் — ஆக எல்லாம் சேர்ந்து கார்த்தியைத் தன் பெரும் பகைவனாகவே முருகேசனார் மதிக்குமாறு செய்துவிட்டன.

மறுநாள், முதல் வேலையாகக் கார்த்தி பணிபுரியும் அலுவலகத்திற்குச் சென்றார் முருகேசனார். அவர் சென்ற வேளை அந்த நிறுவனத்தின் உரிமையாளரே அங்கிருந்தார். முருகேசனாரை அந்த உரிமையாளர் நன்கு அறிந்தவர் தானே! அங்கு கார்த்தி அலுவல் பெற்றதே முருகேசனாரைக்கொண்டு தானே!

கார்த்தி உடனே அழைக்கப்பட்டான். முருகேசனாரை அங்கு கண்டதுமே செய்தியை அவன் புரிந்துகொண்டான்.

தனியறை ஒன்றில் அந்த நிறுவனத்தின் உரிமையாளரும் முருகேசனாரும் இருந்தனர். அவருடன் அங்கே கார்த்தியுமிருந்தான். பொங்கிக்கொண்டு வரும் தம்முடைய ஆத்திரத்தை எவ்வாறோ மறைத்துக் கொண்டு முருகேசனார் உரையாடினார். "வாசு படித்திருக்கின்றானே தவிர, அவன் ஒரு அறியாத பையன். அவனை எப்படியோ மற்றவர்கள் ஏமாற்றிவிட்டிருக்கிறார்கள். ஆட்சிக்கு எதிராகவே அவனைப் போட்டியிடச் செய்திருக்கிறார்கள். ஒரு பெரிய ஆட்சியைச் சின்னப் பையன் எதிர்த்துப் போட்டியிட்டு வெல்ல முடியுமா? அப்படியே போட்டி போட்டு இவனுங்கள் வெற்றி அடைந்தாலும், அந்த வெற்றியால் இவனுங்கள் அடையப் போகும் நன்மைதான் என்ன? வல்லமை மிகுந்த ஒரு ஆட்சியை அழித்துவிட முடியுமா? அதன் போக்கை மாற்றிவிட முடியுமா? உலகமே போற்றக்கூடிய தலைவனையல்லவா இந்தப் 'பெரிய' துணைக்கண்டம். உலகத்திலே எந்தப்பக்கத்தில் அமைதி குலைந்தாலும் அங்கெல்லாம் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு இங்கிருந்து படைகள் அனுப்புகிறார்கள்! இப்படிப்பட்ட ஒரு வல்லரசை எதிர்த்து இந்தச் சின்னப் பயல்கள் போட்டி போடுகிறார்களே, இது ஊருக்கு அடுக்குமா? அரசாங்கம் மட்டும் இப்போது மனசு வைத்தால், இந்த அற்பப்பசங்களையெல்லாம் ஒரே அடியாக அடித்துத் தள்ளிவிடலாம். இருக்கிற இடமே தெரியாமல் அடித்துவிடலாம். புலியை எதிர்த்துப் புழுவா போட்டி போடுவது— இதையெல்லாம் தெரிந்துகொள்ளாமல் இந்தப்பயல் வாசு அந்தப் [illegible]ளோடு சகவாசம் வைத்துக் கொண்டிருக்கிறான். அவன் போட்டி [illegible]

விற்பனையாளர்களுக்கு

மார்ச்சு மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது.

10-ந் தேதிக்குள் பட்டியல் பாக்கி முழுவதையும் அனுப்பத் தவறினால் முன் அறிவிப்பின்றி, அடுத்த இதழ் முதற்கொண்டு அனுப்ப இயலாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

'திராவிட நாடு' இதழ் கூடுதலாகப் பெற விரும்புவோர் புதன் கிழமைக்குள் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
'திராவிடநாடு'

போட்டு வெற்றிபெறுவது ஒருபக்கம் இருக்கட்டும். அந்த வெற்றியினுலே இவனுல் என்ன சாதித்துவிட முடியும்? பொம்மை மாதிரி அவர்கள் எதிரே போய் உட்கார்ந்திருக்கலாம். அவ்வளவுதானே! — இவன் என்னமோ நினைத்துக்கொண்டு இருக்கிறுன். கடைசியிலே இதெல்லாம் என்ன முடிவுக்கு வரப்போகிறதோ! அரசாங்கம் இவனுங்களைச் சும்மா விடப்போறதில்லே! சீக்கிரத்திலே ஒரு நாள் வரப்போகுது. அத்தனை பேரையும் சிறையிலே பிடிச்சித் தள்ளப்போறுங்க! தூக்குத்தண்டனை எத்தனை பேருக்குக் கிடைக்கப் போகுதோ! எத்தனை பேரை நாடு கடத்தப்போறுங்களோ! எத்தனை பேருடைய வீடுவாசல்களைப் பறிக்கப் போறுங்களோ! எத்தனை பேருடைய சொத்து சுகங்களைப் பறிக்கப்போறுங்களோ! — இவனுங்கள் சாதாரணமா நினைக்கிறுனுகள். இந்தப் படை இருக்குதே, இந்தப் பெரிய கண்டத்தோட படை, இது காங்கோ, கடாங்கோவுக்கெல்லாம் போய்வந்த படை! அங்கேயெல்லாம் கிளர்ச்சி பண்ணினவங்க என்ன ஆனுங்க தெரியுமா? நம்ம பெரிய நாட்டோட படை போனதும் அவங்க எல்லாம் அடங்கி ஒடுங்கிப் போயிட்டாங்க! அப்பேற்பட்ட படைகளையுடைய இந்த அரசாங்கத்தோட பொடிப்பயல்கள் போய் எதிர்க்கிறுனுகளே, இவங்களாலே என்ன சாதிச்சுட முடியும்?'' இப்படி இன்னும் எதை எதையோ கூறி இல்லாதவற்றையும், பொல்லாதவற்றையும் அடுக்கிக்கொண்டு போனுர் முருகேசனுர். அவருடைய அச்சுறுத்தும் சொற்கள் ஒவ்வொன்றும் கார்த்திகேயனைச் சிரிக்க வைப்பனவாகத்தான் இருந்தன. அவன் உள்ளுக்குள் முதலில் சிரித்துக்கொண்டாலும், அந்தப் பெரியவருடைய அறியாமையைக் கண்டு பின்னர் அவன் உள்ளம் பெரும் வருந்துதலுக்குள்ளாகியது.

சிறிது நேரம் கார்த்தி ஒன்றும் பேசாமலிருந்தான். முருகேசனுரும் மேலே ஒன்றும் கூறுமல் யோசனையில் ஆழ்ந்திருப்பவர்போல் தென்பட்டார். அப்போது அந்த நிறுவனத்தின் தலைவர் கார்த்தியைப் பார்த்துக் கூறினுர்:

"கார்த்தி! இப்போது நீ நினைத்தால் வாசுவை எப்படி வேண்டுமானுலும் திருப்பலாம். இதோ பார்! வாசு உன்னுடைய நெருங்கிய நண்பன், ஆபத்துக் காலத்தில் உனக்குக் கை கொடுத்து உதவியவன். அதோடு இதோ இவர் முகத்தையும் பார். இப்போது நீ இந்த நிலையை அடைவதற்கு — துன்பத்தை ஓட்டி நல்வாழ்வு வாழ்வதற்கு எப்படி வாசு காரணமோ, அப்படியேதான் இருவரும் காரணம்! மகனுக்கு எப்படி நீ கடமைப்பட்டிருக்கின்றுயோ, அப்படியே தந்தைக்கும் கடமைப்பட்டிருக்கிறுய்! வாசுவுக்கு ஏதேனும் நேர்ந்தால் அவன் தந்தையாகிய இவரால் பொறுத்துக்கொள்ள முடியாது. அமைதி இழந்துவிடுவார் இவர்! பிறகு அந்தக் குடும்பமே சீரழிந்து போய்விடும்! உனக்கு உதவி செய்த ஒரு குடும்பம், உனக்கு மிகமிக வேண்டிய ஒருவரின் குடும்பம் சீரழிந்து சின்னுப் பின்னம் ஆவதை நீ கண்ணுல் பார்த்துக்கொண்டிருப்பது நல்லதா?''

அதற்கு மேலும் வாளா கேட்டுக்கொண்டிருக்கவில்லை கார்த்தி.

"அப்படியொன்றும் ஊறு நேரக்கூடியநிலை இப்போது இல்லையே! வாசுவுக்கோ, அவன் தந்தைக்கோ ஒரு சிறிய ஊறு நேர்ந்தாலும் என்னுல் பார்த்துக்கொண்டிருக்க முடியாதே! நீங்கள் எதை எதையோ கற்பனை செய்துகொண்டு பேசுகிறீர்கள். என்னை அச்சுறுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு பேசுகிறீர்கள்! தயைகூர்ந்து அப்படியெல்லாம் விளையாட்டுக்குக் கூடச் சொல்லாதீர்கள்! யாருக்கும் எந்தத் தீங்கும் வராது. இந்நாடு, இந்த நாட்டுமக்கள் நல்வாழ்வைக் காணவேண்டும். அதுதான் எங்கள் குறிக்கோள். அந்தக்குறிக்கோளின் மீதுதான் இன்று இலட்சக்கணக்கான இளைஞர்கள் எங்கள் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு உழைக்கிறுர்கள். இந்த ஈடுபாடு போராட்டமாகவும்மாறலாம். அப்போது எம்மில் பலரோ சிலரோ உயிரிழக்க நேரலாம்; உடைமைகளை இழக்க நேரலாம்! ஒரு நாட்டின் விடுதலைக்கு முன்னர் இவ்வாறு ஏற்படும் இழப்புக்கள் எல்லாம் அற்பமானவை, சொற்பமானவை! கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாதவை. இப்போது இந்த நாட்டில் அறிவறிந்த பெருமக்கள் முன்னர் நிற்கும் கேள்விகள் இரண்டே இரண்டு. நாம் சுதந்தர வாழ்வு பெற வேண்டுமா, அல்லது நாம் காலமெல்லாம் அடிமைகளாகக் கிடந்து உழலவேண்டுமா என்பனதாம் அந்தக் கேள்விகள். சுதந்தர வாழ்வு தேவை என்போர் அதற்கான விலையைக் கொடுத்துத்தான் தீரவேண்டும்! குழந்தை பெறப்போகின்ற தாய் பேறு கால வேதனை அடைந்துதானே தீரவேண்டும்! சுதந்தர வாழ்வு வேண்டாம்! அடிமை வாழ்வேபோதும் என்போர் உரிமைப் போராட்டத்தை நசுக்கத் துடிப்போருக்குக் கைக்கூலிகளாகலாம், அதன் மூலம் புகழ்பெறலாம், பிச்சை பெறலாம்! வாய்த்தால் ஆடம்பர வாழ்வுகூட வாழலாம், பிறந்த பொன்னுட்டுக்குத் துரோகம் செய்தவன் என்ற நுனிக்கொம்பரில் நின்றுகொண்டு. ஆனுல் அவற்றையெல்லாம் நல்லுள்ளம் ஒத்துக்கொள்ளாது. தீமை புரியும் ஒவ்வொருவரும் முடிவில் உள்ளத்திற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். நல்லுள்ளம் எதைச் சரியென்று சொல்லுமோ, எதைச் சரியென்று கொள்ளுமோ அதைத்தான் நாங்கள் செய்கிறும்.'' இப்படி மடமடவென்று பேசிக்கொண்டு போனுன் கார்த்தி.

(தொடரும்)

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

பொறுப்பாளர்.

"பெருமூச்சு"

வாழ்க்கை, பணமுள்ளோருக்கு கணநேரம் களிப்பூட்டும் சிற்றின்பம் போன்றது. தேமாங்கனியின் சுவைதான். ஆனால், ஏழைகளுக்கு......? எட்டாத திராட்சை! கிட்டாக் கனி!! எட்டிக்காயின் சுவைதான். என் செய்வது? அவர்கள் வந்த வழி அது. இவர்கள் கொடுத்துவைத்ததுஇவ்வளவுதான். இப்படித்தான் இருளப்பன் எண்ணினான்.

ஏழைகளுக்கு வாழ்க்கை ஒரு சுமை. அது அவன் குடும்ப வரலாறு கண்ட உண்மை. அந்தச் சுமை குறைய வேண்டும் என்றால் — இல்லாது போகவேண்டுமானால் அவன் வாழ்க்கையோடு– தவறு, பிறப்போடு பிறந்துவிட்ட "ஏழை" என்ற விருதும், "வறுமை" என்ற நிலையும் மாறவேண்டும். இல்லையேல் மாற்றியமைக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் வாழ்க்கை வாழ்க்கையாக இருக்கமுடியும் — இருக்கும் என்பது அவன் நடைபாதையில் கற்றறிந்த வாழ்க்கைத் தத்துவம்.

ஏழையாகப் பிறந்தான். ஏதுமில்லாதவனாக வளர்ந்தான். ஏழாவது வயதை அடையுமுன்பே அவனைப் பெற்றுப் பேணி வளர்த்த அன்னை இந்த மண்ணுலகை மறந்தாள். விண்ணோடு கலந்துவிட்ட அவள் நினைவு ஏழாதவாறு, அவனுக்குத் தானே எல்லாமானார் அவன் தந்தை.

வறுமை வாட்டியபோதும் தன் மகனை வளத்தோடு வளர்க்கவே அந்தத் தந்தை விழைந்தார். செயல்படுத்த அவர்பட்ட பாடுகள்—உற்ற அல்லல்கள் ஏராளம். அனைத்தையும் அவர் தன் அன்பு மகன், புத்தகமும் கையுமாக பள்ளிக்குச் சென்று வருவதைப் பார்த்ததும் பஞ்சாய்ப் பறந்துவிடும். தான்பட்ட அத்துணைத் துன்பங்களையும் இன்பமாகக் கொண்டுகளித்தாரென்றால், அந்தத் தந்தையின் உள்ளத்தைப் பற்றிய விளக்கம் தேவையற்றதுதான்.

காலம் கடந்துகொண்டிருந்தது. இருளப்பன் இளைஞனாக உயர்நிலைப் பள்ளியின் இறுதி வகுப்பில் உலா வந்துகொண்டிருந்தான். தேர்விற்கு இன்னும் ஒரு வாரமே எஞ்சி இருந்தது. அதனால் அவன் தனது முழுக் கவனத்தையும் படிப்பிலேயே செலுத்தி இருந்தான்.

வாழ்க்கையைப் பற்றியும், வறுமையைப்பற்றியும் சிந்தித்துப் பார்க்கவும் சூழ்நிலையற்ற நிலையில் வளர்ந்து வாலிபனான அவனுக்கு—

ஈழம்—மாரா. தமிழ்ச்செல்வன்

துன்பமென்றால் ஈதென்று தெரியாத அவனுக்கு, அதைச் சிந்தித்துப் பார்க்கும் நிலையைக் காலம் உருவாக்கித்தரக்காத்திருப்பதை அவன் இப்பொழுது உணரவில்லை. எதாலும் சாதிக்க முடியாதவைகளை எல்லாம், காலத்தால் சாதிக்கமுடியும் என்பதை அவன் எப்படி அறியப் போகின்றான்?

அவன் தந்தை அவனது இறுதிப் பரீட்சைக்குக் கட்ட வேண்டிய பணம் தன்னிடம் இல்லாத காரணத்தால், எதிர்வீட்டு ஏகாம்பரத்திடம் கடன் வாங்கிக் கட்டி இருந்தார். அதை மீண்டும் இன்று தருவதாக வாக்குறுதியளித்திருந்தார். அதனால் அதை இன்று எப்படியும் கட்டியாக வேண்டும் என்று பாடுபட்டார்.

தன்னோடு ஆலையில் வேலை செய்யும் தொழிலாளத் தோழர்கள் சிலரிடம் கேட்டுப்பார்த்தார். மாதம் பிறந்து நாள் நான்கு ஆனதுமே கையில் காசில்லாமல் திண்டாடும் தொழிலாளர்களிடம் எப்படி இருபதிற்கு மேலிருக்க முடியும்?

வாய்ம்மை தவறாத அவர் எப்படியும் கொடுத்தாக வேண்டுமென்று துடிதுடித்தார். வேறு வழி தேடினார். நேரே தன் தங்கையின் வீட்டிற்குச் சென்றார். விபரத்தைத் தன் தங்கையிடம் எடுத்துக் கூறினார். அவளும் வேறு வழியின்றித் தன் செல்வ மகள் முத்தம்மாளின் காதில் கிடந்த இரட்டைக் கம்மலையும் வாங்கிக் கொடுத்தாள். இருளப்பனின் தந்தைக்கு விருப்பம் இல்லைதான். என்றாலும் வாய்ம்மையைக் காக்க வேண்டுமே? வேறு வழியின்றி வாங்கிக்கொண்டு திரும்பினார்.

கதிரவன் மேலை வானில் மறைந்துவிட்டிருந்தான். காரிருளும் சூழ்ந்துவிட்டது. அதன் எடுத்துக்காட்டாகத் தெருவிலுள்ள மின்விளக்குகளெல்லாம் எரிய ஆரம்பித்துவிட்டன. அதைப் பார்த்ததும் பதைபதைத்துப் போனார். பள்ளியிலிருந்து பிள்ளை திரும்பி இருப்பான். விளக்கில்லாது வீடு இருண்டு கிடப்பது கண்டு தந்தை ஏன் இன்னும் வரவில்லை என்று மனக் கலக்கமுற்றிருப்பான். அத்தோடு எதிர்வீட்டு ஏகாம்பரத்திற்கு வேறு ஏழுமணிக்கெல்லாம் பணம் தருவதாகக் கூறியுள்ளோம். சொல்லிவிட்டோம். எப்படியும் சொல்லிய சொல்லைக் காப்பாற்றவேண்டும். இதை எண்ணியதும் அவர் கால்கள் தானே வேகமாக இயங்க ஆரம்பித்துவிட்டன. வேகமும் தவிப்பும் ஒன்று சேரவும்,

ஓட்டமும் நடையுமாகத் தெருவில் விரைந்து சென்றுகொண்டிருந்தார்.

ஒரு திருப்பம். வீட்டிற்கு அருகில். எதிர்புறத்திலிருந்து திரும்பி வேகமாக வீதியைக் கடக்க ஆரம்பித்தார். கண் இமைக்கும் நேரம். காற்றோடு போட்டிபோட்டுக்கொண்டு பறந்துவந்து கொண்டிருந்த பளபளக்கும் காரொன்று "கிரீச்" என்ற பேரிரைச்சலுடன் ஒரு குலுங்கு குலுங்கி நின்றது. அடுத்த கணம் "ஐயோ" என்ற அலறல். தூக்கி எதிர்க்கரையில் எறியப்பட்ட இருளப்பனின் தந்தை இரத்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தார்.

*

நள்ளிரவு; சுடுகாட்டு அமைதி என்பார்களே, அதுதான் இப்பொழுது அங்கு அரசோச்சிக்கொண்டிருந்தது.

வரிசையாகப் பல கட்டில்கள் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு கட்டிலிலும் பெரும்பாலும் உருவங்கள் தெரியாத அளவுக்குக்கட்டுகள் பல உள்ளவர்களே பிணம்போல் படுத்திருந்தார்கள். ஆனல், அந்தக் கடைசிக் கட்டிலில்மட்டும்...அடையாளமும் தெரிந்துகொள்ள முடியாத அளவு பல கட்டுகளுடன் கிடத்தப்பட்டிருந்த மனித உருவம் இலேசாக அசைவு பெற்றுக்கொண்டிருந்தது. அதினின்றும் வேதனையின் முனகல் ஒலி மெதுவாகக் கேட்டது. அதன் இரு விழிகளும் மூடியே இருந்தன. அந்த மூடியவிழிகளையே இமைகொட்டாது கட்டிலருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த இருளப்பன் பார்த்துக்கொண்டிருந்தான்.

நேரம் சிறிது சிறிதாகச் சென்றுகொண்டிருந்தது. முன்பு அமைதியை ஆட்கொண்டிருந்த அக்கூடம் இப்பொழுது நேரம் செல்லச் செல்ல, சற்று பலத்த முனகல் ஒலியுடனிருந்தது. அந்த ஒலி அதிகரிக்க அதிகரிக்க இருளப்பனின் இதயத் துடிப்பும், இமைகளின் படபடப்பும் விநாடிக்கு விநாடி அதிகரித்துக்கொண்டே இருந்தது.

சிறிதுநேரம் சென்றது. மூடியிருந்த அவன் தந்தையின் இமைகள் இலேசாகத் திறந்தன. இதைப் பார்த்ததும் இருளப்பன் இமயத்தை எட்டிப்பிடித்துவிட்டவன்போல் எக்களிப்புமிகக்கொண்டான். பல நாட்களாக முடிக்கிடந்த தந்தையின் இமைகள் திறந்துவிட்டன அல்லவா?

வானத்திலே கணநேரம் தோன்றி, பல வர்ணங்காட்டி மறையும் வானவில் போன்றதுதான் மனிதனின் வாழ்க்கையில் நடைபெறும் பல நிகழ்ச்சிகளும் என்பதை அவன் எங்கே அறியப்போகின்றான்? அணையப்போகும் விளக்குச் சுடர்விட்டுப்பிரகாசித்த பின்புதான் அணையும் என்பதை அவன் அறிந்திருந்தாலும் அநுபவித்ததில்லையே. அதை அனுபவிக்கும் காலமும் நேரமும் இப்பொழுது நெருங்கிவிட்டதை அவன் உணரவில்லை.

திறந்த அந்த இமைகள் கணநேரம் துடிதுடித்தன. பின் சோகத்தின் சாயல். இருளப்பனைப் பார்த்து இருதுளி கண்ணீர் சொட்டியது. அடுத்தவினடி அந்த விழிகள் மூடிக்கொண்டன. உடலும் அசைவற்றுவிட்டது.

ஆம்! அவன் தந்தை இந்தப் பொல்லாத உலகை மட்டுமல்ல, ஒரு சொல்லைக் காப்பாற்ற முயன்றதால் ஒன்றும் தெரியாத பேதை மகன் இருளப்பனிடமும் சொல்லாமலேயே சென்றுவிட்டார்.

அவன் கதறினன். கண்ணீர் வடித்தான். தலையைப் பலங்கொண்டமட்டும் கட்டிலின் தூணிலே இடித்துக்கொண்டான். பலன்......? இவனைப்போல் எத்துணையோ அனாதைகளையும், ஆதரவற்றவர்களையும் சந்தித்துவிட்ட அந்தக் கட்டிலும் கூடமும், அவன் அபயக்குரல்கேட்டு என்ன அடைக்கலமா தரப்போகிறது? இல்லை! இப்பொழுது அவன் "அப்பா" என்று அலறிய அவலச்சொல்தான் அங்கு எதிரொலித்துக்கொண்டிருந்தது.

*

தன் மகன் கல்லூரிவரைக்கும் சென்று படித்துப் பட்டம்பெற முடியாதுபோனலும், தன் ஆற்றல், முழுவதையும் செலவழித்தாவது எப்படியும் பள்ளியின் இறுதி வகுப்பையாவது முடிக்கட்டும் என்றுதான் பாடுபட்டார். அதற்காக எதிர்வீட்டு ஏகாம்பரத்திடம் கடனும் வாங்கினர். இறுதித் தேர்வுக்குப் பணமும் கட்டினர்.

சொன்ன சொல்லைக்காக்க—தன் நாவின் நாணயத்தை நிலைநாட்டத் தன் தங்கை மகள்—தன் எதிர்கால மருமகள் செவந்த மேனியின் அழகுக்கு அழகுசெய்துகொண்டிருந்த இரட்டைக் கம்மலையும் அடகுவைக்கத் துணிந்தார். ஆனல்......

அவர் இலட்சியக் கனவுகள்—இன்ப நினைவுகள் அனைத்தும் அவரோடு மண்ணோடு மண்ணாகிவிட்டன. கைக்கெட்டியது வாய்க்கெட்டுமுன்னே இயற்கை தட்டிப்பறித்துக்கொண்டது.

ஐயர் வருமட்டும் அம்மாவாசை காத்துக்கொண்டா இருக்கிறது? இல்லையே! இருளப்பன் இறுதித் தேர்வு எழுதவில்லையே என்பதற்காகத் தேர்வை ஒத்தியா போடப்போகின்றார்கள்? நம்மைக் கேட்டுக்கொண்டு இருதயம் துடிப்பதில்லையே?

காட்டாற்று வெள்ளம்போல் காலம் ஓடிக்கொண்டே இருந்தது. தந்தை காலமாகிவிட்ட சோகத்திலே மீளமுடியாத துயரத்தில் தன்னைமறந்து, கண்ணற்ற கபோதிபோல் காலம் கழித்துக்கொண்டிருந்தான் இருளப்பன். எப்படியோ காலாண்டு ஓடி மறைந்துவிட்டது.

ஆதரவற்றிருந்த அவனுக்கு ஆதரவு தந்து, அடைக்கலமளித்தாள் அவன் அத்தை காத்தாயி. அவள் பெற்ற மகள் முத்தம்மாளோ தன் உயிரையே அவன்மேல் வைத்திருந்தாள். ஆனல், அவன் மாமன் முருகனுக்கு அவனைக் கண்டாலே பிடிக்காது. இந்த நிலையில் இருளப்பனே தன்னை மறந்து நடைப்பிணம்போல் நடமாடிக்கொண்டிருந்ததால், எதையுமே உணர்ந்துகொள்ள முடியாதவனய் இருந்தான். அவன் நிலைகண்டு அதிகமாகத் துன்பமும் துயரமும் கொண்டவள் முத்தம்மாள்தான் என்றல், அவள் உள்ளநிலை எத்தகையதாக இருக்கும் என்பது அவனுக்கே தெரியாது. புரிந்துகொள்ளும் நிலையிலும் இல்லை.

அன்று மாலை வெளியே சென்றிருந்த இருளப்பன் எண்ணத்தை எல்லாம் துன்பத்தில் திளைக்க வைத்துவிட்டு; வேதனையின் திருவுருவாய் வீட்டு வாசற்படியில் அடியெடுத்து வைத்தான். அடியெடுத்து வைத்தவன் அப்படியே நின்றுவிட்டான்—உள்ளிருந்து கேட்ட கடுமொழியினல். அவனுடைய மாமன் கக்கிய கடும் சொல்லடி அவனைக் கல்லாலடித்த சிலையாக்கிவிட்டது.

"தடிப்பயல்! தண்டச்சோறு தின்னுக்கிட்டு தருதலையாட்டமில்லே ஊரைச் சுத்திக்கிட்டுத் திரியிருன். அவன் அப்பனுக்குப் பொண்ணோடை கம்மலைக்கொடுத்தேன்; இப்பஇவனுக்கு நீ உன்னோடை தாலியையேஅறுத்துக்

கொடுக்கப்போறே.'' இது அவன் மாமனின் கடுமொழி.

''ஐயயோ! அப்படி எல்லாம் சொல்லாதீங்க'' என்றலறியவாறு அவன் அத்தை முருகனின் வாயைப் பொத்தும் அவலக்காட்சி.

இவைகள் அவனைத் தன்னிலைபெற வைத்தன. மனிதனாக மாறினான். அவன் கால்கள் அவனை அறியாமலேயே திருப்பி நடத்திச்சென்றது. இதைத் தற்செயலாகத் திரும்பிய முத்தம்மாள் பார்த்துவிட்டாள். 'அப்பா' என்று கத்தினாள் ஆத்திரத்தோடு.

முருகன் தன்போக்கில் வசை பாடிக்கொண்டே இருந்தான். இருளப்பன் திரும்பிச் செல்வதைக் கண்டு ஒரு கணம் திகைத்து நின்ற முத்தம்மாள், மறுகணம் வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல் பாய்ந்தோடி வந்தாள் வெளியே.

சற்றுத் தொலைவில் இருளப்பன் தள்ளாடியவாறு நடந்து செல்வதைப் பார்த்துவிட்ட அவள், பின் தொடர்ந்தாள். அருகே சென்றதும் ''அத்தான்; அத்தான்'' என்று வேதனையோடு அழைத்தாள். குரல் தழதழத்தது. தடுமாறிக்கொண்டிருந்தவன், அவள் குரலொலி கேட்டு நின்றான். நிதானத்தோடு திரும்பிப் பார்த்தான்.

முத்தம்மாள் விழிகளிலே வழிந்தோடும் கண்ணீரையும் பொருட்படுத்தாது அவனையே ஊடுருவி நோக்கிக்கொண்டு சிலையாக நின்றிருந்தாள். அவள் கன்னக் கதுப்புக்களிலே கண்ணீர் முத்து முத்தாகச் சிதறிக்கொண்டிருந்தன. பார்வையிலே சோகம் இழையோடிய ஏக்கம். அவனைப் பார்த்துக்கொண்டு அப்படியே நின்றான் மௌனமாக.

அவன் விழிகளிலும் கண்ணீர் துளிர்த்தது. இருதுளிக் கண்ணீரை அவள் ஏக்கப் பார்வைக்குக் காணிக்கையாக்கிவிட்டு மெள்ளனமாகவே திரும்பி நடந்தான்.

அவன் செயல் கண்டு அவள் திகைத்தாள். ஆழ்கடலில் சிக்கித் தவிக்கும் கலம்போல் தத்தளித்தாள். ''அத்தான்'' என்றலறியவாறு தாவிச் சென்று அவன் கரம்பற்றி இழுத்து நிறுத்தினாள்.

அவன் நிதானத்தோடு அவளை ஏறிட்டு நோக்கினான். அவளோ இதயம் துடிதுடிக்க, இமைகள் படபடக்க, விழிகள் நீர் சுரக்க அவனை ஏக்கத்தோடு பார்த்தாள். அவளால் பேசமுடியவில்லை. அவள் பேசத் துடிப்பதை உதடுகளின் துடிப்பு எடுத்துக்காட்டியது. தனது பேசும் கண்களால் அவனோடு பேசிக் கொண்டிருந்தாள். அதை அவனும் புரிந்துகொண்டான் போலும்.

''முத்தம்மா, என்னைத் தடுக்காதே, என் போக்கில் விட்டுவிடு, நான் வருகிறேன்'' என்றான்.

''விட்டுவிடுகிறேன்'' அத்தான். ஆனால் என் வேண்டுகோளையும் வெறுத்தொதுக்காமல் ஏற்றுக் கொள்ளவேண்டும்.''

''வேண்டுகோளா?''

''ஆமத்தான். இந்த அபலையின் வாழ்வே அதில்தான் அடங்கி இருக்கிறது.''

''என்ன சொல்கின்றாய்?''

''சொன்னால் மறுக்கமாட்டீர்களே! நான் வேண்டும் வரத்தைத் தர மறுக்கமாட்டீர்களே!?''

''புரியும்படி சொல் முத்தம்மா. என் சித்தமே கலங்கி இருக்கிறது.''

''அந்தப் பித்தத்தைத் தெளிவு படுத்தும் சித்தவைத்தியராக இருக்க நான் ஆசைப்படுகிறேன்.''

''என்ன?''

''என்னையும் அழைத்துக்கொண்டு போங்கள்.''

''முத்தம்மா!''

''அத்தான்!''

அவன் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தாள்.

அந்த உணர்விலே திளைத்திருந்தவன் தன்நிலை பெற்றதும் சொன்னான் ''நான் அனாதை'' என்று.

''நானிருக்கும்போது அச்சொல் உறவுகொண்டாட முடியாதே அத்தான்.''

''இருக்க ஒரு இடமும் இல்லை.''

''இந்தப் பரந்த உலகத்தில் நம் மிருவருக்கு மட்டும் இருக்க இடமில்லாமலா போய்விடப்போகிறது?''

''ஒரு வேளை உணவளிப்பதற்கும் வகையற்றவன்.''

''உழைக்கும் ஆற்றல் நம்மிடமிருக்கும்போது அந்தக் கவலைக்கேது இடம்?''

''உழைக்கும் வகை தெரியாதவன்.''

''நிலை வரும்போது வழிதானே கிடைக்கும்.''

''வேலையற்றவன்.''

''தேடிப்பெறுவோம்.''

''கிடைக்காவிட்டால்...?''

''முயற்சி மெய்வருந்தக் கூலி தரும் அத்தான். கூலி வேலை என்றாலும் கூடிச் செய்வோம். கூழ் என்றாலும் அதை அமுதமாக நினைத்து அன்புடன் குடிப்போம். எந்நாளும் இணைபிரியாது குடும்பம் என்ற படகில் இரு துடுப்புக்களாக இருந்து, வாழ்க்கை என்ற ஆழ் கடலில்; இல்லறமென்ற நல்லறத்தின் பயணத்தைத் தொடங்குவோம். பிணங்கிடாது வாழ்வோம். இறப்பென்

விற்பனையாகிறது 14-வது இதழ்!

'நகரசபையில் தி. மு. க. சாதனைகள்'

துணைமேயர் மு. வேதாசலம் விளக்கும்

பேட்டிக் கட்டுரை

இந்த இதழில் இடம்பெற்றிருக்கிறது!

முன்னேற்றம்

ஆசிரியர்: அரசு

தி. மு. க. வார இதழ் விலை 13 காசுகள்

எங்கும் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு:-

முன்னேற்றம், சிந்தாதரிப்பேட்டை, சென்னை-2.

ருலும் இணைந்தே இறப்போம். இதைத்தான் அத்தான் நான் விரும்புகின்றேன். என் விருப்பத்தை மறுக்காதீர்கள். எங்கு எப்படி இருந்தாலும் நான் உங்களுடன் இருந்தால் அது ஒன்றே போதும்.''

''போதும் முத்தம்மா போதும். உன் உள்ளத்தை நான்தெள்ளத் தெரிந்துகொண்டேன். கள்ளமில்லா உன் உள்ளத்தைக் களங்கப்படுத்த மாட்டேன். காலமெல்லாம் இப்படியே நாம் கண்ணீர் வடிக்க நேர்ந்தாலும் கணவன் மனைவியாகவே வாழலாம். ஆனால்...''

''என்னத்தான்?''

''என் சொத்தாகிவிட்டாய் நீ. உன்னைப் பாதுகாக்கவேண்டாமா நான்? அதற்காக...''

''அதற்காக...?''

''நான் தக்கதொரு வழியினைத் தேடிக்கொண்டு திரும்பு மட்டும் நீ உன் பெற்றோர்களுடன் சிறிது காலம் வாழ்ந்துதான் ஆகவேண்டும்.''

''அத்தான்!''

''ஆமாம் முத்தம்மா. வாழ்க்கை என்றால் என்னவென்றே தெரியாமல் இத்தனை காலமாக இருந்துவிட்டேன். இல்லை! என் அப்பா அப்படி என்னை வளர்த்துவிட்டார். துன்பம் என்னவென்று தெரியாதவன் நான். தொல்லைகள் என்னைத் தொடர்ந்ததே இல்லை. வாழ்க்கைப் போராட்டத்தின் முதற்படியைக்கூட இன்னும் நான் கடக்கவில்லை. முத்தம்மா, என்னைப் பெற்று, பேணி வளர்த்தத் தந்தை இயற்கையின் வசமாகிவிட்டபின்தான் என் கண்களிலே கண்ணீர் கசிய ஆரம்பித்திருக்கிறது. என்றாலும் நான் இன்னும் உலகத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்நிலையில் நாம் இணைந்து வாழமுடியுமா? ஏதுமற்ற நான் இல்லறத்தை இனிது நடத்த முடியுமா? முடியும், முயன்றால் என்பாய். இல்லை என்று நானும் சொல்லவில்லை. என்றாலும்; முதலில் நான் என்னையே மனிதனுக்கிக்கொள்ள விரும்புகின்றேன். அதற்காகவேண்டியேனும் என்னைச் சிறிது காலம் தனித்து வாழவிடு முத்தம்மா.''

''அத்தான்! உங்களை உணர்ந்துகொண்டுவிட்டேன். இனி நான் உயிரோடு இருந்தால் உங்களுக்காக எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் உங்கள் முத்தம்மாளாகவே காத்திருப்பேன்.''

''முத்தம்மா!''

''அத்தான்! முடிவாக ஒன்று...''

''என்ன முத்தம்மா?''

''ஆத்திரத்தில் அப்பா ஏதோ பேசிவிட்டார். அதை மனதிலே வைத்துக்கொள்ளாதீர்கள். அவர் குணமே அப்படித்தான்.''

''அதற்காகதான் வேதனைப்படுகிறேன் என்று நினைக்கின்றாயா? இல்லை முத்தம்மா. அப்படி நீ நினைத்திருந்தால், அதை இப்பொழுதே மாற்றிக்கொள். உன் தந்தையால் தான் உலகத்தை ஓரளவுக்கு நான் புரிந்துகொள்ள முடிந்தது. அதோடு உன் உள்ளத்தையும் தெரிந்துகொள்ள முடிந்தது. இன்று உள்ளத்தால் உறவாடும் நாம் விரைவில் உலகறிய கணவனும் மனைவியுமாக வாழ்வோம். அதற்காக நாம் உன் தந்தைக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.''

''நல்ல உள்ளம்கொண்ட உங்களுக்கு எத்தனை பெரிய சோதனைகள் ஏற்பட்டுவிட்டன?''

''சோதனைஏற்படவில்லை என்றால், நான் வாழ்க்கையின் வடிவத்தையே கண்டிருக்க முடியாதே.''

''உண்மைதான்.''

''பல்கலைக் கழகங்களில் சொல்லித் தரப்படுகின்ற பாடங்களையும், புத்தகங்கள் அறிவுறுத்துகின்ற அறிவுரைகளையும்விடச் சமுகம் என்ற கலாசாலையில் ஏற்படுகின்ற அனுபவம் என்ற அறிவே சாலச் சிறந்ததென்பதை இப்பொழுது உணருகின்றேன்.''

''குறைமதியாக இருந்த என் மனது இப்பொழுதுதான் அத்தான் நிறைமதியாகியது. உங்கள் நிலை கண்ட நான் எங்கே என் வாழ்வு கறைபட்டுப் போய்விடுமோ என்று பயந்துகொண்டிருந்தேன். இனி அந்த நிலைக்கே இடமில்லை. நம் வாழ்வு வளர்பிறையாக வளரும். தேய் பிறையாக முடியாது.''

''முத்தம்மா!''

''அத்தான்!''

பாசத்தின் பிணைப்பிலே இரண்டு இளம் உள்ளங்களும் நேசத்தால் பின்னிப் பிணைந்து, இணைந்துறவாடின. இன்பத்தின் எல்லையிலே தொல்லையின்றி உள்ளக் களிப்பிலே திளைத்திருந்தனர்.

''முத்தம்மா, முத்தம்மா'' என்ற குரலொலி கேட்டு இணைந்திருந்த இருவரும் இந்த உலகத்திற்கு வந்தனர். சுய நினைவு பெற்றுப் பிரிந்தனர்.

''அத்தைபோலிருக்கிறது.'' அவன் சொன்னான்.

''ஆமாம்! அம்மாதான்.'' அவள் ஆமோதித்தாள்.

''சரி. நான் வருகிறேன்.'' போகத் திரும்பினான்.

''அத்தான்!''

''அழாதே முத்தம்மா, பிரிவு வேதனையைத் தந்தாலும், பின் நம்மைப் பிணைத்துவைக்கும் இணைப்புச் சங்கிலியும் அதுதானே? கவலையின்றிப் போய் வா. காலம் நம் பக்கம்தான் இருக்கிறது. களிப்பும் காதல் வாழ்வும் நமக்காகக் காத்திருக்கிறது.'' ''முத்தம்மா!'' மீண்டும் அவன் அத்தையின் குரல் கன்றைக் காணாது கதறும் தாய்ப் பசுவைப்போல் கேட்டது. ''வருகிறேன் அத்தான்'' ஏதோ பேச நினைத்தாள். பிரிவுத் துயர் தொண்டையை அடைத்திருக்கவேண்டும். கண்களில் நீர் வடிய, இதயம் நீண்ட நெட்டுயிர்ப் பிடப், பேசமுடியாதவளாய்த் தாங்க முடியாத சோகச்சுமையைச் சுமந்துகொண்டு திரும்பி நடந்தாள்.

'அவனோ அவள் உள்ளத்துநிலை உணர்ந்து, நிலைகுலைந்து, வாயடைத்து நின்றுவிட்டான். நீர்த் திவலைகள் பார்வைக்குத் திரையிட்டன. இன்பமும் துன்பமும் இதயத்திலே கலந்துறவாடின.

எதிர்காலத்தை நினைத்தான். ஏக்கம் பிறந்தது. அதைப் போக்க முயன்றான். அப்போது பிறந்தது ஒரு பெருமூச்சு ''ஆம்! அந்தப் பெருமூச்சு அவன் இதயத்து வேதனைகளின் எதிரொலி! இதயக்குமுறலின் பிரதிபலிப்பு, மாற்றாரால் பொருள் காண முடியாத கருவூலம்!!''

ஆம்! ''பெருமூச்சு'' உருவகப் படுத்தும் வரலாறு ஒரு புதுமையான நிகழ்ச்சிகளின் தொகுப்பு. அதற்குப் பொருள்காண விழைவது, புதிருக்கு விடைகாண முயல்வதுபோல் தான். அவனுடைய ''பெருமூச்சு''ம் அதைத்தான் படம்பிடித்துக்காட்டியதுபோலும்! திரும்பித் தொடர்ந்தான் தன் வாழ்க்கைப் பயணத்தை. முடியுமோ முடியாதோ? யாருக்குத் தெரியும்?

★

வருந்தவில்லை!

—[அன்பு. த. நாராயணசாமி, L. C. E.]—

“சோமு! சோமு! என்னடா அப்படி எழுதிகிட்டேயிருக்கே? எப்ப பார்த்தாலும் எழுதறதும், படிக்கறதும்தானு? இப்படியேயிருந்தால், உடம்பு என்னுகும்? கொஞ்சமாவது சாப்பிட வேண்டாமா? வாடா சோமு, வந்து சாப்பிடு!”

அம்மாவின் அன்பான வேண்டுதல் என் செவிகளில் விழாமலில்லை! ஆனல், என் மூளையில்தான் விழவில்லை! கற்பனைக் கருவூலங்களே என் மூளையில் நிரம்பியிருக்கும்போது, அம்மாவின் சொற்கள் எங்கே ஏறப்போகின்றன! சிறிது நேரத்திற்கெல்லாம் அம்மாவே வந்து என் உடலை அசைத்த பிறகுதான், நான் என் சுய உணர்வு பெற்றவனுகி, “என்னம்மா, கூப்பிட்டீர்களா?” என்றபடியே அம்மாவை நோக்கினேன்.

“ஆமாண்டா சோமு! மணியைப் பார், பத்தாகிவிட்டது! இன்னமும் இப்படியே உட்கார்ந்துகொண்டு எழுதியபடியேயிருந்தால், சாப்பிடுவது எப்போ, தூங்குவது எப்போ? என்னவோப்பா, இந்தக் ‘கட்டை’ இருக்கிறவரைக்கும் நீ மாறமாட்டாய்! உனக்கு ஒரு ‘கால் கட்டை’ போட்டால்தான் நீ திருந்துவாய்...”

அம்மாவின் பேச்சை இடைமறித்து, “என்னம்மா, சாப்பாடு தானே, வா சாப்பிடலாம்!” என்று கூறியபடி, சமையலறையினுள்புகுந்தேன்.

அம்மா படைத்த அமுதைஉண்டு எழுந்து, மீண்டும் என் அறைக்கே தஞ்சம் புகுந்தேன். பாவம் அம்மா! எனக்காக எப்படியெல்லாம் கஷ்டப்படுகிருள்! என் ஒருவனுக்காகவே தன்னுடைய உயிரையும் வைத்திருக்கிருள்! அவளுடைய சொத்து, சுதந்திரம், உயிர், இன்பம் அனைத்தும் நான்தானே! நானில்லாவிட்டால், என் தாய்க்கு ஊர் ஏது? உலகமேது? உற்ற கணவரைத்தான் தேர்ந்தெடுத்தாள். மற்றவர்களைப் போலத்தான் தான்பெற்ற இன்பத்தைச் சுவைத்து வாழ்ந்தாள்! பாழும், இருதயநோய், என் தந்தையைத் தன் உறவினனுக ஏற்றுக்கொண்டதே! இதோ, உனக்கு நானே மனைவியாக இருக்கிறேன், அவளை மறந்துவிடு, என்று என் தந்தையை இயற்கை அழைத்துக்கொண்டு ‘எங்கோ’ போய்விட்டதே!

ஆனல், ஏதோ படித்த நான், அருந்தமிழின் அருமை பெருமைகளை அறிந்துகொள்ளாமல் விட்டுவிடவில்லை! கற்ற மொழியிலே உற்ற கருத்துக்களை, மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளும் விதத்திலே எழுத வேண்டும்; எழுதி எழுதியே தமிழை மேன்மேலும் மேன்மையுறச் செய்ய வேண்டும்; சிறந்த கருத்துக்களை; சிறப்பிக்க வேண்டிய கருத்துக்களை; சீரழிந்த இந்தச் சமுதாயத்திற்கு எழுதி எழுதியே வெளிபபடுத்த வேண்டும், அதையே என் தொழிலாகக்கொள்ள வேண்டும் என எண்ணினேன்; அதன்படி, எழுதுவதையே என் தொழிலாகக் கொள்ளவும் செய்தேன்!

என்னைவிட அறிவில், அனுபவத்தில், ஆற்றலில் உயர்வு உடைய எனது அன்னை எனது கருத்துக்களிலே அறிவும், அனுபவமும், பலனும், பெருமையும் இருப்பதை என்னிடம் கூறும்போது, நான் கொள்ளும் பெருமைக்கு அளவேயில்லை! ஆனல், எனது வேண்டுகோளுக்கு, எனது விருப்பத்திற்கு இசைய அம்மா, ஏனே. சிறிது தயங்கினுள்! தயக்கம் இயற்கை தானே? பாழும் வயிறுதானே, இதற்கெல்லாம் காரணம்? வயிற்றுக் கவலை இருக்குமட்டும், அறிவுக் கவலை ஏற்படப் போவதெங்கே? ஆசை இருக்குமட்டும், ஆசாபாசங்கள் அழியப்போவதெங்கே? வறுமை வாட்டுமட்டும், பெருமையளிக்கும் வளமைநிறையப்போவதெங்கே? பணநாயகத்திற்குப் பயப்படும் பாழும் உலகம் இருக்குமட்டும், ஜனநாயகம் தலைதூக்கச் சற்றுச் சிரமம் ஏற்படுவது இயற்கை தானே?

அதனுல்தான், எனது தாயாரும், “அப்பா, மகனே! உன்னுடைய வேண்டுகோள் சரியானதே! எழுதுவதையே தொழிலாகக்கொள்ளலாம். ஆனல், எழுத்துத்துறையிலே உனக்கு நல்ல வருமானம் கிட்டுமா? அப்படியே கிட்டும் வருமானம், இன்றைய நாட்களில் நம்வாழ்வைக் கழிக்க உதவுமா? சிறந்த கருத்துக்களைக் கூறுவதிலே தவறுகிடையாது. உலகம் இதனை ஏற்றுக்கொள்ளும். சிறந்த கருத்துக்களைக் கூறியவனை, வானளவாகப்புகழும். அவ்வளவே தன் கடமை என்று வாளா இருந்துவிடும். ஆனல் உன் நிலையை ‘அந்த உலகம்’ என்றுமே உன்னைத் திரும்பிப்பார்க்காதே! அப்பொழுது என்னசெய்ய? துணைத் தொழிலாக மட்டும் இதைக்கொள். வேறு ஏதாவது சிறந்த நல்ல வருமானம் வரும்படியான தொழிலை முதன்மையாகக்கொள். இதுதான் என் அறிவுரை!” என்று அடிக்கடிக் கூறுவாள்.

அன்னையின் கூற்றிலும் உண்மை இல்லாமல்இல்லை! அம்மா அப்படிக் கூறுவதற்கே காரணம் என்ன? எத்தனையோ ஆண்டுகளாக நானும் இத்தொழிலை மேற்கொண்டு, அதனுல் சிறிதும் பொருளீட்ட முடியாத என் நிலையை அம்மா நன்கு உணர்ந்துவிட்டார்கள்.

எத்தனை நாட்களுக்குத்தான் நானும் இப்படியே பலன் சிறிதும் கிடைக்கப்பெருமல் எழுதி அனுப்பிக்கொண்டேயிருப்பது? என்னுடைய கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து வெளியிட்டுப் பணம் அனுப்பிவைக்க வேண்டுமென்பது மட்டுமே என்னுடைய குறிக்கோள் அல்ல. அப்படிப்பட்ட குறிக்கோள் உடையவனுகியிருப்பேனேயானல்

இத்தனை ஆண்டுகளில் நான் வேறு ஏதேனும் ஒரு தொழிலை மேற்கொண்டு, சிறந்த வருவாயை பெற்று வளத்தோடு வாழ்வேனே!

எப்படியும் எனது கருத்துக்கள் நாட்டிலே நடமாடவேண்டும். சாதித் துவேஷமும்; பணச்செருக்கும்; அறியாமை வியாதியும் மலர்ந்து பரவிக் கிடக்கும் இப்பாழும் சமுதாயம் சீர்திருந்த எனது கருத்துகள் ஓரளவு பயன்பட்டால் அதுவேபோதும் என்பதுதான் என் அவா, உயிர்த் துடிப்பு எல்லாம்!

ஆனால், நினைப்பதெல்லாம் நடந்துவிடுகின்றதா? அதே சமயத்தில், நடப்பதெல்லாம், நினைவிலிருந்து எழுந்தவையாகத்தானே இருக்கின்றன! இது, விசித்திரமாக இல்லை?

என் உதவியை எதிர்பார்த்து என் எதிரிலேயே இருக்கும் கண் கண்ட தெய்வமாம் அன்னை இருக்க, அவளுக்கு உதவிபுரியாது, என்னை யாரென்றே அறியா, என்உதவியை சிறிதும் எதிர்பார்க்காத, எனக்கு வெகு தொலைவிலிருக்கும் இந்த உலகத்திற்கு நான் ஏன் முண்டியடித்துக்கொண்டு ஓடிப்போய், என் நிலையையும் சீரழித்துக் கொண்டு, உதவ முன்வரவேண்டும்?

என் அன்னையைவிட இந்த உலகமா பெரிது? 'உலகம் பெரிது. அதை உதவாக்கரையாக விட்டு விடக் கூடாது' எனக்கருதி, உலகத்திற்குப் புத்திமதி கூறப்போகும் என்னையே பெற்றெடுத்தவள் ஒருத்தி இருக்கிறாள் என்றால், எதை நான் பெரிதாகக் கருதுகிறேனே, அதைவிட, என் தாயல்லவோ பெரிதாக—உயர்வுடையவளாக—இருக்க முடியும்?

*

ஆம்! நான் என் அன்னையைக் காக்கும் பணியில் ஈடுபட்டேன். எனது தாயாருக்குத் தெரிந்த ஒரு தொழில் மனையில் சிறுவேலையில் அமர்ந்தேன். அதில் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டே, எங்கள் உடலைப் பேணி வாழ்ந்தோம்!

என்றேனும் ஒருநாள், நான் தூக்கிவிடப்படுவேன். இந்த நம்பிக்கையில்தான் நான், எழுதுவதை அடியோடு விட்டுவிடாது, துணைத் தொழிலாகக் கொண்டு திரிகிறேன். என் கற்பனை எண்ணம் நீண்டு கொண்டேயிருந்தது. ஆனால், வாசற்படியேறியதும், அங்கு நான் கண்ட காட்சியால், "ஐயோ! என்னம்மா இது? இப்படி அலங்கோலமாக விழுந்து கிடக்கிறாயே! என்னம்மா, உனக்கு?....'' என்றபடியே அலறித் துடித்து, என் தாயை அணுகி அவளைத் தொட்டேன். ஐயோ! என்ன கொடுமை இது? என் தாய் என்னைவிட்டுப் போய்விட்டாளே! நான் வருந்தியழுவதில் பயனில்லை! என்னை ஈன்றெடுத்தாள்; வளர்த்தாள். வளர்ச்சியோடு தானும் வளர்ந்தாள், வாழ்ந்தாள்! இன்று, இறந்துவிட்டாளே!

என்னைத் தனியாகத் தவிக்க விட்டுவிட்டுச் சென்றுவிட்டாளே! நான் என்ன செய்வேன்.........? என்னுள் நானே புலம்பிக்கொண்டேன். ஆனால், பிறகுதான், என்னை நானே தேற்றிக்கொண்டேன்! ஆமாம்! எல்லாம் எனக்குள் நானே செய்துகொள்ளவேண்டியதுதானே. ஏழையின் தேம்பலைத் தேற்றுபவர் யார்? அனாதையின் புலம்பலைத் தடுத்து நிறுத்துவார் யார்? நான் அனாதை! நான் ஏழை! என்னைத் தனியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள். இப்படி எண்ணவே என் மனம் இடம் தரவில்லை. நான் எப்படி அனாதையாகி விடமுடியும்? நானேயே ஒருவனை மணந்துவிட முடியுமே! நான் எப்படி ஏழையாக இருக்கமுடியும்? நானேயே நான் பணக்காரனாகிவிட மாட்டேனா? என்னிடமிருந்து என் தாய் பிரிந்துவிட்டாள், ஆனால், என்னைத் தனியே விட்டுவிடவில்லை. இந்த உலகத்திலே ஒருவனாக அல்லவா விட்டுவிட்டுச் சென்றிருக்கிறாள்.

இதே கருத்தில்தான், நல்லவர்களிடமிருந்து நல்ல கருத்துகள் பிறக்கின்றன. நல்ல கருத்துகள் நாட்டிலே நடமாடுகின்றன. நாளாவட்டத்தில், அந்த நல்ல கருத்துக்களிலேயிருந்து இன்னும் நல்ல கருத்துக்கள் துளிர்க்கின்றன. முன்னைய கருத்திலிருந்து,மிகச்சிறந்தகருத்துப் பிறந்துவிட்ட பின், பழைய கருத்து வலுவிழந்து மறைந்துவிடுகின்றது. இப்படியே, நல்லது ஒன்றிலிருந்து மற்றொன்று வளர்ந்துகொண்டே வருகிறது, இடைவெளி இல்லாமல், தொடர்ந்தாற்போல்!

இந்த நினைப்பிலேயே நடமாடும் என்னை, இப்பொழுதெல்லாம் 'பித்துக்குளி'யென்றே என் தோழர்கள் கூறுகின்றனர். தாயை இழந்த கவலையில் இப்படியாகிவிட்டான் என்றுதான் அவர்கள் கருதுகின்றனர். இதுதான் அவர்களுக்குத் தெரிந்த ஒரே காரணமும்!

ஆனால் நான், எனக்குத் தெரிந்த மட்டில், பித்தனாக இல்லை!

அன்றும் இல்லை, இன்றும் இல்லை; இனியும் இருக்கப்போவதில்லை!

அன்று வேலை முடித்து வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். நான், நாள்தோறும் வழக்கமாக இதழ்களை வாங்கும் கடையில் நின்று ஒரு பத்திரிக்கையைக் கவனித்தேன். அந்த இதழிலே ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. 'முடிவும், முதலும்' எனும் தலைப்பிலே அக்கட்டுரை எழுதப்பட்டிருந்தது! 'என்னதான் எழுதியிருக்கிறது, படிக்கலாமே' என்று அந்த இதழை விலைகொடுத்து வாங்கி, வீடு சென்று வாசித்தேன்.

என்ன ஆச்சரியம்! என்னுடைய அதே கருத்துகள்தாம்! என் தாயின் இறப்பிற்குப் பிறகு நான் எழுதி அனுப்பிய, இறப்பும், பிறப்பும் எனும் கட்டுரையின் கருப்பொருள், கருத்து, அப்படியே பிரதிபலித்துக் காட்டுகிறதே அக்கட்டுரை.

அதை என்னவென்று சொல்வேன், எப்படி அதைப் போற்றுவேன்! என் கருத்து வெளிவந்து விட்டது! என் கனவு பலித்து விட்டது! ஆனால், அக்கட்டுரை என் பெயரில் வெளிவரவில்லை! இன்னொருவரின் பெயரில்! அதற்காக நான் வருந்தவில்லை! எனது கருத்து வெளிவந்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சியுற்றேன்.

பிரிந்த உயிர், மறு உருவிலே பிறப்பதில்லையா? பட்டமரத்தின் இனம், மீண்டும் செடியாகி வளர்வதில்லையா? அதுபோலத்தான், என் கருத்து, மறுபெயரிலே பிறந்து விட்டது. என்னுடைய எண்ணம், இன்னொரு தலைப்பிலே பிறந்து, கட்டுரையாகி வெளிவந்துவிட்டது! அதுபோதுமே! புகழும், பெயரும், பணமும், எதிர்பார்க்காது என் கருத்து வெளிவந்தாலே போதும் என்றிருக்கும் நான் இதற்கெல்லாம் வருந்துவேனா? வருந்தவில்லை!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

இத்தகு எண்ணம் தலைநீட்ட ஆரம்பித்தது. கோடை முடிந்து மாரி வரும்பொழுது புதிதாக முளைக்கும் செடிகொடிகள்தலைநீட்டுவதுபோல, அவைகள் வளருவதுபோலவே இவர் எண்ணமும் மனைவியின் கர்ப்பத்தோடு போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்தது. அடிக்கடி தன் மனைவியிடம் தனக்கு மகன் தான் பிறக்கப்போகிறான் என்றும், அவன் தன்னைப்போல ஊழியனாகயிராமல் உயர்தர அதிகாரியாகத்தான் ஆவான் என்றும் கூறிவந்தார். அவரின் மனைவியும் முதலில் ஏதேதோகூறிக் கிண்டல் செய்தாள். பின்னர் இவரின் ஆடங்காத ஆவலிலே அவளும் பங்குகொண்டாள். பிறகு உயர்தர அதிகாரி என்றால், எந்த அதிகாரி என்பதிலே போட்டிகள் துவங்கின.

ஒருசமயம் அச்சத்தோடேயே, ஆனால் ஆவலை அடக்க முடியாமல் தன்சக ஊழியர்களிடத்திலே தனக்குப் பிறக்கப்போகும் மகனை உயர்தர அதிகாரி ஆக்கப்போகிறேன் என்று கூறினார்.

அடிமைப்பட்டே கிடக்கிற மனமும், மழைத்துளிகளையே காணாத நிலமும் ஒன்றுதானே! இவரின் பேச்சைக் கேட்டு அவர்கள் சிரித்த சிரிப்பு மாதவரின் உள்ளத்திலே ஒரு அச்சத்தையே மூட்டிவிட்டது. மறுபடிமறந்தும்கூடத்தன் மகன்பற்றிய பேச்சை அவர் அவர்கள் முன்னிலையில் எடுத்ததில்லை.

மகன் பிறந்தான் மாதவரின் மனம்போலவே, ஆனால் தாய் மண்ணுக்கு இரையானாள்; பிறக்கும் போதே தாயைக் கொன்றுவிட்டானே......இருந்தாலும் ஒரு ஆறுதல், இவன் அவள் சாயல். தன் மனம்போல வந்த மகன். பின்னர் தந்தையும், தாயுமானார்.

தனக்கென்று எதுவும் தேவையில்லை என்ற நிலைபெற்றார். பற்றற்ற துறவியாக ஆகவில்லை என்றாலும்; எல்லாவற்றிற்கும்மேலாகத் தன் மகனுடைய சுகமே தன் சுகமாக இருந்தது அவருக்கு. அவனின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஈடுகொடுப்பதே இவரது பொழுதும், போக்குமாக ஆயிற்று. அவன் சிரித்தால் சிரிப்பார். அவன் அழுதால் அழுவார். அவன் அமைதியாக இருந்தால் மட்டும் இவர் உள்ளம் ஏனோ புரட்சி செய்தது.

உயர்தர அதிகாரி ஆகப்போகிறவன் என்ற முறையில் அவனைச் சீமான் வீட்டுப் பிள்ளைகள் செல்லும் பள்ளிக்கே அனுப்பிவைத்தார். பள்ளியே அதுவென்றால் பழக்க வழக்கங்கள் முறைகள் நெறிகள் யாவும் சொல்லவேண்டுமா? எல்லாம் அவ்வாறே.

மாதவரின் பையன் என்று அறியாதவர்கள் எவரும் அவனைக் கண்டவுடன் அவனது மேல்நாட்டுப் பாணியிலே உள்ள நடை, உடை, பேச்சு, பாவனை எல்லாவற்றையுமே கண்டு இவன் யாரோ சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை என்றுதான் சொல்வார்கள். சொல்லியும் இருக்கிறார்கள். அவ்வாறு சொல்வதைக் கேட்டபொழுதெல்லாம் மாதவருக்கு ஓடிவரும் தென்றல்யாவும் கூடிக் குளிப்பாட்டுவதுபோல இருக்கும். தன்னை அறியாமலே அவர் அடிக்கடிச் சொல்லிக்கொள்வதும் உண்டு.

'என் மகன்......இல்லை.....இல்லை .....அவன் சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளை. இல்லை......இல்லை......என் மகன்தான். என்றாலும் அங்கே பிறக்கவேண்டியவன். இங்கே வந்து எனக்கு மகனாகத் தப்பிப் பிறந்து விட்டான். அவனைச் சுகமாக வைத்திருப்பது நம் கடமை....நம் கடமை ....ஏனென்றால், நானே அவன் பெரிய அதிகாரி அல்லவா...!

பங்களாக்களிலே படுத்துறங்கி, பட்டணங்களிலே வாசம் செய்து, பளபளப்பான மோட்டார்களிலே பவனி வந்து பலர் கைகட்டி நிற்க இருக்கப்போகிறவன் அல்லவா...... அதனால்தான் என்று.

மகன்தான் என்றாலும், அவனை 'அவனே-இவனே' என்று அழைப்பதே அவருக்கு முடியவில்லை. மனம் இடந்தந்தால்தானே! நானே இந்த நாட்டை ஆளும் அதிகாரியாகப் போகிறவனை அப்படி அழைக்கலாமோ? நாமே இப்படி அழைத்தால் அதைப்பார்த்து மற்றவர்களும் அழைக்கத் தொடங்கிவிடுவார்கள். அதற்கு நாம் வழி வகுக்கக்கூடாது என்று எண்ணிய நிலையில். அவரே, இவரே என்றும் வாங்கோ--போங்கோ-- இருங்கோ என்ற பாணியிலேயே அழைத்து வந்தார். அவன் பெயரைத் தப்பித்தவறி உச்சரிக்க நேர்ந்தால் கூட மனததை நொந்துகொள்வார். 'துரை' இந்தத் தொல்லை எதற்கு பெயரையே இப்படி ஆக்கிவிட்டால்? துரைபாக்கினர். துரை...துரை... என்றே அழைத்தார். அதனால் இடப்பட்ட முதற்பெயர் முற்றும் அழிந்த முதற்காதலைப்போல ஆயிற்று. துரை வருகிறார்— போகிறார் என்றுதான் அழைப்பார்.

இவ்வாறு மாதவர் தன் மகன் மணியைநடத்துவதையும்,அழைப்பதையும், ஆராதிப்பதையும் பார்த்துப் பரிகசித்தனர் பலர். பரிகசிக்கிற முறையில் அவர்கள் மணியை மாதவர் அழைப்பதைப்போல் அழைத்துக்காட்டுவார். மாதவருக்கு நன்றாகத் தெரியும் அவர்கள் யாவரும் தன்னைப் பரிகசிக்கிறார்கள் என்று. அவர் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. எந்த நோக்கத்தோடு அழைத்தால் என்ன? தன் மகன் மதிப்பாக அழைக்கப்படுகிறான் என்பதே போதும் என்று எண்ணினார். சட்டி எதாக இருந்தால் என்ன? அவருக்கு வேண்டியது கொழுக்கட்டைதான்.

ஒரு சமயம் மணி தன் பள்ளித் தோழனை அடி அடியென்று அடித்து விட்டிருக்கிறான். அவன் இவரிடம் வந்து தன் வழக்கைச் சொன்னான். மாதவருக்குத் தன் மகன் அடித்து விட்டான் என்பதே பெருமையாகப் பட்டது. அதனால் அந்தப் பெரு மிதத்திலே மிதந்தபடியே 'அவன் அடிப்பான் நீ பெற்றுக்கொள்ளத் தான் வேண்டும். அவன் துரையடா —துரை' என்று கூறி அவனைத் துரத்திவிட்டார்.

மகன் வந்த பிறகும் அவர் இது பற்றிக் கேட்கவே இல்லை. அடிபட்டவன் தந்தையிடம் சென்றதும், அவர் கூறிய விடையும், மணி தன் நண்பர்கள் மூலமாகக் கேட்டறிந்தான். பின்னர் கேட்கவேண்டுமா? அன்று முதல் அவன் டார்வின் சித்தாந்தத்தை மெய்ப்பிக்கத் துவங்கி விட்டான். அதனால் கொடுக்கல்-வாங்கல் இரண்டுமே தினம் தினம் நடைபெற ஆரம்பித்தது. அடிதடி வகையில்தான். மாதவர் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. 'அவன் துரையென்றால் துரைதான்' 'துரையெல்லாம் அப்படித்தான்' என்று கூறிக்கொண்டிருந்தார்.

இப்பொழுதும் அவன் வளர்ந்த வகையைப்பற்றிப் பெருமையாகவே கருதினார். அப்படியெல்லாம் வளர்த்ததால்தானே பெரியஅதிகாரி ஆகிவிட்டிருக்கிறான். சுட்டியாக இருந்ததால்தானே காவலர் துறையில் அதிகாரியானான், என்று புகன்றது அவர் மனம்.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மெல்லச் சிரித்தார். சிரித்த நிலையிலேயே அவரை அறியாமலேயே அவர் கரங்கள் அவரது சட்டைப் பைகளுக்குள் சென்றன — துளாவியது. ஒன்றும் அகப்படவில்லை. வெறும் பை... அவர் வாய் முணுமுணுத்தது.

அவர் எண்ணம் மேலே படர்ந்தது. தன்னுடைய பையைப் போலத்தான் இன்று அவரும் இருந்தார். தனக்கென்று ஒன்றும் இன்று அவரிடம் இல்லை. முன்னோர்கள் முதலையும்கூடவல்லவா அவர் மணி வளர்ச்சிக்காகச்செலவிட்டுவிட்டார். எல்லாமேதன்மகன் மணியாகிவிட்டபொழுது அவருக்கு மற்றதெல்லாம் துச்சமெனப்பட்டதில் புதுமை இல்லை. என்றாலும் அவர் மனம் இதை எண்ணியவுடன் துணுக்குற்றது. மறுபடியும் அவர் மனம் 'வெறும் பை' என்றது.

மறுவிநாடி 'நானிருக்கப்பயமேன்' என்பதுபோல மகனின் அழகு முகம் தோன்றிச் சிரித்து மயக்கிற்று.

"ஆமாம்... ஆமாம்...... அவன் இருக்க நமக்கென்ன அச்சம். நான் இராசாபோலே இருப்பேன் என்றார் சற்று உரத்த குரலிலே!

சொல்லி முடித்திருப்பார். ஊழியன் ஓடிவந்தான்; வந்தவன், 'ஐயா வந்துவிட்டார்' என்றவாறே உள்ளே ஓடினான்.

'பெரியய்யா?'

'ஆமாம்—அவருந்தான்...' ஊழியன் உள்ளே ஓடியபடியே உதிர்த்த சொற்களோடு, விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினான்.

மாதவரின் மனம் இதுவரை யாரோ தெருவாயிற்படிக்குத் தள்ளிக்கொண்டு செல்வதுபோலத் தள்ளிக்கொண்டு சென்றது.

இவர் வாயில் தாண்டிச் சாரளத்திற்கு வரவும், மணி தன் மேலதிகாரியோடு வந்து காரிலிருந்து இறங்கவும் சரியாக இருந்தது.

அப்பொழுது இருந்த மாதவரின் மனத்தை எந்த அளவுகோலைக் கொண்டு அளப்பது? அது வானினும் உயர்ந்தது, கடலினும் ஆழமானது, பூவுலகினும் பரந்தது என்றுதான் சொல்லவேண்டும். அவருக்குத் தன் மகன் மேல் அதிகாரியோடு சமதையாக வருவதைக் காணும்பொழுது... 'காணக் கண் கோடி வேண்டும்' என்பார்களே! அதைப்போலக் காணக் கண்கள் கோடி பெற்றதில்லையே என்றுதான் எண்ணினார். இருந்தாலும் விடவில்லை; முழுக்க முழுக்க அள்ளிப் பருகினார்.

மகனும், அந்த அதிகாரியும் இவரைப் பார்த்தபடியே உள்ளே சென்றனர். இவர் கரங்கூப்பிக் கும்பிட்டவராக ஒதுங்கி நின்றார். அவர்கள் இருவரும் நடுக் கூடத்தில் சென்று அமர்ந்தனர்.

இவரால் வெளியில் நின்றுகொண்டிருக்கவும் முடியவில்லை. ஊழியனை உள்ளே சென்று துரிதப்படுத்தவும் முடியவில்லை. உள்ளே செல்ல வேண்டும் என்றால், அவர்கள் இருவரையும் தாண்டித்தான் செல்ல வேண்டும். அப்படித் தாண்டும்பொழுது இருவருடைய பார்வையும் தன் மீது விழும். அதனால் இருவரின் பேச்சும் தடைப்படும். மாதவருக்கு அவர்களின் பேச்சுத் தடைப்படுவதுகூட விரும்பக்கூடாத ஒன்றாகப் பட்டது.

மேலும் என்ன பேசிக்கொள்கிறார்கள். தன் மகன் அவருடன் எப்படிப் பேசிப் பழகுகிறான். அவன் செயல்கள் என்ன? என்பனபோன்றவைகளை அவர் கண்கள் கண்டுகொண்டே இருக்கத் துடித்தன. மனம் உந்தியது. மெல்ல வெளி வராண்டாவை விட்டு உள்ளே வந்து ஒருபுறமாக அவர்கள் கண்ணில் படாமல் நின்றவாறே இருவரையும் பார்த்தபடி இருந்தார். இருவரின் பேச்சும் தெளிவாகக் கேட்டது. மாதவருக்குத் தன்னை யாரோ? எங்கோ? கற்பனையே செய்யமுடியாத சுகானுபவத்திற்கு அழைத்துச் செல்வதுபோல் பட்டது. இத்தகு காட்சிகளுக்காகத்தானே ஏங்கினார், இடிபாடுகளை அனுபவித்தார். இன்றோ......! அவர் மனம் விமானத்தில் பறந்துசெல்வது போலிருந்தது. அப்படியே ஓடிச்சென்று 'மகனே...!' என்று கட்டிக்கொண்டு முத்தமிட்டு ......அவர் கரங்கள் எதிரே இருந்த பலகணிக் கம்பிகளை இறுகப்பற்றி எழுந்தன.

அதற்குள் வந்த விருந்தினரின் சொற்கள் காதில் விழுந்தன, 'வரும் வழியில் வராண்டாவில் நின்றுகொண்டிருந்தானே, அவன் யார்?'

மாதவரின் காதுகட்கு அச்சொற்கள் இடியின் ஓதையைப்போல் அடித்தன. இதயம் சில துமிகள் பெண்டுலம் கழன்று வீழ்ந்த கடிகாரம்போல் அடித்துக்கொண்டது.

தன் மகன் நிச்சயம் அவரின், 'அவன்' என்ற சொற்களுக்குச் சரியான அடி கொடுப்பான்' மாதவரின் மனம் கூச்சலிட்டது.

மணியோ, 'ஓ......அவனா? அவன் புதிய தோட்டக்காரன். இரண்டு நாட்கள்தான் ஆயிற்று இங்குவந்து ....!'

மேலும் மணி என்னென்னவெல்லாமோ பேசினான். மாதவருக்கு மேலால் பேசியது யாவும் சந்தை இரைச்சலாயிற்று. அவர்தலை சுழன்றது, அவரே சுழன்றார்; எதிரே உள்ள பொருள்கள்யாவும் சுழன்றன; உலகமே சுழன்றது; அப்படியே சுழன்று கீழே விழுந்துவிட்டார்.

பின்னர் சுயநினைவு வந்தவராக எழுந்து பார்த்தார். யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. மெல்ல எழுந்து திடமான மனம்கொண்டவராகத் தெருவாயிற்படிகளில் இறங்கினார். எதிரே ஊழியன் வந்தான். வந்தவன் "ஐயா, அவரைவிட்டுவர இட்டுச் சென்றிருக்கிறார'' என்றான்.

மாதவரோ, 'வரட்டும்...வரட்டும்' என்றவாறே வெளியேறிக்கொண்டிருந்தார். அவர் மனத்தில் சுகமான பழைய நிகழ்ச்சிகள் மீண்டும் சுழன்றன. ஆனால் எவ்வளவு பெரிய ஏமாற்றம்? இப்பொழுதுதான் அந்தப் பழையநிகழ்ச்சிகள் எப்படியெல்லாம் தன் மகனைத் தயாரித்திருக்கின்றன என்பது பட்டது அவருக்கு.

'சரி....சரி......விதைத்ததுதானே விளையும்' என்று கூறியபடியே திரும்பிக்கூடப் பாராமலே மேலும் நடந்தார்—நடந்தபடியே இருந்தார்.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.